KALIṄKATTUP PARAṆI

in English



INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai - 600 119
India.

KALIṄKATTUP PARAṆI

IN ENGLISH

General Editor

Dr. G. JOHN SAMUEL

Editor

Dr. P. THIAGARAJAN

English Rendering
By

Dr. E. S. MUTHUSWAMY



INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Chennai – 600 119

INDIA

Silver Jubilee Celebration Series – 18

KALIṄKATTUP PARAṆI
IN ENGLISH

First Edition 2006, pp. xxx + 388

Publication No. 109

ISBN 81-87892 – 38 - 2

Price: Rs.350/- US $ 25

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai – 600 119.
India.
Phone: (Off.) 24501851, 24500831, 24502212
(Res.) 24964831
Fax : 91-44-24964831
E-mail: ias@xlweb.com
World Wide Web site:http://xlweb.com/heritage/asian

Composed by
Institute of Asian Studies, Chennai – 600 119.

Printed at Student Offset Services, Chennai - 1, ✆42052908

CONTENTS

A System of Transliteration of Tamil

VOWELS

Short		Long		Dipthong	
அ	a	ஆ	ā	ஐ	ai
இ	i	ஈ	i	ஔ	au
உ	u	ஊ	ū		
எ	e	ஏ	ē	ĀYTAM	
ஒ	o	ஓ	ō	ஃ	k̲

CONSONANTS

Hard		Soft		Medial	
க்	k	ங்	n	ய்	y
ச்	c	ஞ்	ñ	ர்	r
ட்	t	ண்	n	ல்	l
த்	t	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	l̲
ற்	r̲	ன்	n̲	ள்	l
ஸ்	s	ஷ்	s	ஹ்	h
		ஜ்	j		

ஆங்கில ஆக்கம் பற்றிய ஒரு குறிப்பு

தமிழில் ஒப்புயர்வற்ற பரணி இலக்கியமாகத் திகழும் **கலிங்கத்துப் பரணியை** ஆங்கிலத்தில் சிறந்த முறையில் மொழிபெயர்த்து வெளியிட்டு உலகறியச் செய்யவேண்டியது தமிழரின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்; இக் கடமையை ஆசியவியல் நிறுவனம் செய்திருக்கிறது.

சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியாகப் பணியாற்றிவரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவரும் நல்லதொரு தமிழ்க் கவிஞருமாகிய பேராசிரியர் டாக்டர் இ.சு. முத்துசாமி அவர்கள், தாம் ஓய்வுபெற்றபின் ஆசியவியல் நிறுவனத்தில் இருந்தபோது **கலிங்கத்துப் பரணியின்** ஆங்கில ஆக்கத்தைத் திறம்படச் செய்துகொடுத்தார்கள். இம் மொழிபெயர்ப்பு நூலினை ஆசியவியல் நிறுவன வெள்ளிவிழா வெளியீடுகளில் ஒன்றாக வெளியிட்டுள்ளோம்.

பரிதிமாற் கலைஞர் தொடங்கி, காலப்போக்கில் பலர் **கலிங்கத்துப் பரணியைத்** தமிழில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். இருப்பினும், இந்நூலின் 596 கலித்தாழிசைப் பாடல்களையும் சீர்பிரித்து எளிமைப்படுத்தியும், அதே நேரத்தில் தமிழ் மரபு குன்றாமல் பதிப்பித்தும் வெயிட்டவர் தமிழ்ன்பர் புலியூர்க் கேசிகன் ஆவார். 1958ல் **கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி, அருணா பப்ளிகேஷன், சென்னை**—வெளியீடாக வந்துள்ள புலியூர்க் கேசிகன் பதிப்பையே ஆங்கில ஆக்கத்திற்குரிய தமிழ் மூலமாக மொழிபெயர்ப்பு ஆசிரியர் எடுத்துக்கொண்டுள்ளார். ஆனால், கலித்தாழிசைப் பாடல்களுக்குப் புலியூர்க் கேசிகன் கொடுத்துள்ள தலைப்புகளில் சிலவற்றைப் பொருத்தமாக மாற்றியமைத்துள்ளார் மொழிப்பெயர்ப்பு ஆசிரியர்.

அயல்நாட்டினரும் உணர்ந்துகொள்ளும் வகையில் கலிங்கத்துப் பரணியின் 596 கலித்தாழிசைப் பாடல்களையும் ஒலிபெயர்ப்புச் செய்து இந்நூலின் பின்னணைப்பாகத் தந்துள்ளோம்.

கலிங்கத்துப் பரணியின் இந்த ஆங்கில ஆக்கத்தைத் தமிழ்கூறும் நல்லுலகும் புலம்பெயர்ந்து சென்று அயல்நாடுகளில் வாழும் தமிழர்களும் தமிழ் ஆர்வமிக்க மேனாட்டு அறிஞர் பெருமக்களும் விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

பதிப்பாசிரியர்

A Note On The English Translation

It is the prime duty of the Tamils to translate their immortal classics like *Caṅkam Literature*, *Kaliṅkattup Paraṇi* and other Tamil classical woks into English and make them known throughout the world. The Institute of Asian Studies has taken up this great responsibility and has accomplished the same.

Dr. E. S. Muthusamy, former Professor of Tamil, Presidency College, Chennai, was the one proficient in Tamil and English and was also a very good Tamil poet. When he was serving in the Institute of Asian Studies after his retirement, he did the translation of *Kaliṅkattup Paraṇi* into English in a very impressive way. We are bringing out this translation as one the releases of the Silver Jubilee celebration of the Institute.

Initially, the Tamil edition of *Kaliṅkattup Paraṇi* was published by the great Tamil savant Paritimāṟ Kalaiñar (Suriyanarayana Sastri) in the year 1898 and afterwards, many Tamil scholars had edited this work in the course of time. But the person who brought out a good edition for all the 596 verses of *Kaliṅkattup Paraṇi* simplifying the sandhi rules without prejudice to Tamil tradition was Mr. Puliyūrk Kēcikaṉ, a notable Tamil scholar. Dr.E.S. Muthusamy has taken up the Tamil version of Puliyūrk Kēcikaṉ edition of *Kaliṅkattup Paraṇi* published in the year 1958 by the Aruna Publishing house, Chennai. The translator has changed Puliyūrk Kēcikaṉ's certain titles of the poem suitably, in order to make it more effective.

A Romanised version of the 596 verses of *Kaliṅkattup Paraṇi* is also given as an annexure to this publication with a view to facilitate even Non - Tamils to understand it easily.

I do hope that this English rendering of *Kaliṅkattup Paraṇi* will be received with eagerness both by the Tamil diaspora and foreign Tamil scholars throughout the world.

Editor

பதிப்பாசிரியர் முகவுரை

பரணி இலக்கிய அடித்தளம்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வெற்றிக்குரிய தெய்வமாகிய **கொற்றவையைப்** பரவி வழிபடும் வழக்கம் பழந்தமிழகத்தில் இருந்துவந்தது. 'கொற்றம்'- என்ற தமிழ்ச் சொல்லுக்கு வெற்றி என்பது பொருளாகும்; போர் வெற்றியைத் தரும் தெய்வத்தைக் **கொற்றவை** என்று பண்டைத்தமிழர் கொண்டனர்.

' மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் ...." (தொல். புறத். 4.)

என்று கொற்றவை வழிபாட்டைத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். வெற்றித் தெய்வமாகிய கொற்றவையைத் தோற்றவர்களும் வென்றவர்களும் ஒருசேர வழிபடுவர் என்றும் தெரியவருகிறது. "தோற்றோர் கொற்றம்வேண்டியும் வென்றோர்க்கும் மேற்செல்லுங்கால் கொற்றம் வேண்டியும் வழிபடுவராதலின்" - என்பது நச்சினாரக்கினியரின் விளக்கக் குறிப்புரையாகும் (தொல். பொருள் 59. நச். உரை).

தொல்காப்பியச் செய்யுளியலில் பேராசிரியர் தரும் விளக்கமும் இங்குக் குறிப்பிடத்தக்கது:- "காடுகெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றி அதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்துகொண்டு சொல்லப்படுதலின்......." என்பது நோக்கத்தக்கது (தொல். செய்யுள். 149. பேராசிரியம்.).

புகழெனின் உயிரையும் கொடுக்கத் தயங்காத வீரப் பாரம்பரியத்தில் வந்த பழந்தமிழர், பரணி நாளில் போர்த் தெய்வமாகிய கொற்றவையைப் பரவி வீரவழிபாடு செய்வர் என்பதும், அவ்வழிபாட்டின்போது தங்கள் அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனுடைய வீரத்தையும் வெற்றிச் சிறப்பையும் போற்றி வாழ்த்துவர் என்பதும் தொல்காப்பியர் காட்டும் '**கொற்றவை நிலை**' என்ற புறத்துறையாலும், அத்துறைக்குப் பேராசிரியர் மற்றும் நச்சினார்க்கினியர் தருகின்ற தெளிவான விளக்கக் குறிப்புகளாலும் அறியலாம்.

"குறிஞ்சித் திணைக்கு முருகவேளே யன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெற்றாம்" (தொல்.பொருள் இளம்பூரணம்.62.) என்பது இளம்பூரணர் உரைக்குறிப்பு. குறிஞ்சி *நிலத் தெய்வமாகிய கொற்றவை காலப்போக்கில் பாலைக்குரிய தெய்வமாகக்*

கொள்ளப்பட்டாள். பிற்காலத்தவர் கொற்றவையைக் '**காடுகெழு செல்வி'** என்றும் '**காளி தேவி'** என்றும் கூறுவாராயினர்.

தொல்காப்பியப் புறத்திணையியலில் வருகின்ற '**காடு வாழ்த்து**' என்னும் துறையும் குறிப்பிடத்தக்கது. இத்துறை பரணி இலக்கியத்தில் வருகின்ற '**காடு** பாடியதை' நமக்கு நினைவூட்டுகிறது. உரையாசிரியர் இளம்பூரணர் இப் புறத்துறைக்கு எடுத்துக்காட்டாகப் புறநானூற்றுப் பாடல் பகுதியை மேற்கோள் காட்டியுள்ளார்;

" களரி பயந்து கள்ளி போகிப்
பகலும் கூவும் கூகையொடு பிறழ்பல்
ஈமவிளக்கின் பேஎய் மகளிரொடு
அஞ்சுவது அன்றியும் மஞ்சுபடு முதுகாடு" (புறம் : 356) இங்குக் ' காடு' என்பது நீர்வளம் நிலவளம் குன்றிய வறண்ட பாலை நிலத்தையும், அந்நிலத்தைச் சாரந்த சுடுகாட்டின் இயல்பையும் சுட்டுவது நோக்கத்தக்கது. மேலும் தொல்காப்பிய வாகைத் திணையில் வருகின்ற '**முன்தேர்க் குரவை**', **பின்தேர்க் குரவை** என்ற புறத்துறைகள் பரணி இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடிகளாக அமைகின்றன.

பரணி இலக்கிய யாப்பு முறைக்கும் தொல்காப்பியச் செய்யுளியலே அடிப்படையாக அமைகின்றது. கலிப்பாவின் வகைகளில் ஒன்றாகக் ' **கொச்சக ஒரு போகு**' என்பதைத் தொல்காப்பியர் கூறுவர். இதன் உட்பிரிவாக வரும் '**தாழிசைக் கொச்சகக் கலிப்பா**' வைப் 'பரணித்தாழிசை' என்று பேராசிரியர் குறிப்பிடுவர். பரணி இலக்கியம் கலித்தாழிசையில் அமைகின்றது. இருசீர்– முச்சீர்க்கு மேற்பட்ட எத்தனை சீர் வேண்டுமானாலும் பரணித் தாழிசையின் ஓரடியில் அமையலாம் என்பதும், பரணியில் கலித்தாழிசைகள் இரண்டடியாகவே அமையும் என்பதும் குறிப்பிட்டத்தக்கது.

"அளவடி முதலா அடியிரண் டாக
உளமகிழ் பரணி உரைக்கப் படுமே" என்று வரும் '**இலக்கண விளக்கப் பாட்டியலால்** இவ்வுண்மை விளங்கும்.

சங்க இலக்கியப் பாடல்களிலும் தொல்காப்பியப் புறத்துறைகளிலும் மாவீரர்களையும் அவர்கள் பெற்ற சிறப்பான வெற்றிகளையும் போற்றிப்பாடும் மரபும், அரசர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அவர்தம் வீரத்தையும் வெற்றிச் சிறப்பையும் பாராட்டி உரைக்கும் மரபும் மிகுதியாகவுள்ளன. இம்மரபு **கலிங்கத்துப் பரணி** போன்ற இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைகின்றது.

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி" என்பதால் மாவீரர்களைத் தலைவர்களாகக் கொண்டு பரணி பாடுவது மரபு என்பதும் தெரியவருகிறது.

மேலே காட்டிய உண்மைகளைக் கூர்ந்து நோக்கவார்க்குப் போர் வெற்றியைச் சிறப்பித்துப்பாடும் புறத்திணை இலக்கியமாகிய பரணி இலக்கியத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தொல்காப்பியப் புறத்துறைகளும் சங்க இலக்கியப் பாடல் மரபுகளும் அடித்தளமாக அமைகின்றன என்பது நன்கு விளங்கும்.

<u>பரணி– பெயர்க் காரணம்</u>

'பரணி' – என்பதன் பெயர்க்காரணத்தைத் தமிழ்த் தாத்தா டாக்டர்.உ. வே. சா. அவர்கள் தம் தக்கயாகப்பரணி முன்னுரையில் பின்வருமாறு எழுதுகின்றார்கள்: "பரணி என்னும் பெயர்க்காரணம் பலவாறாகக் கூறப்படினும் காளியையும் யமனையும் தெய்வமாகப் பெற்ற பரணி என்னும் நாள்மீனால் வந்தபெயர் என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது" (ப. iii.).

திவாகர நிகண்டையும் டாக்டர்.உ.வே.சா. அவர்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். 'காடுகிழவோள் பூதம் அடுப்பே தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப் பகுக்கப்பட்டது பரணிநாள் பெயரே' (திவாகரம் 2-3244) என்பதும் குறிப்பிடத்தக்கது.

'பரணி' –என்பது நாள்மீனின் பெயர்; அப்பெயர் அந் நட்சத்திரம் பொருந்திவரும் நாளுக்கு முதலில் ஆகுபெயராய் வந்தது; பின்பு பரணி நாளில் நடைபெறும் கொற்றவை வழிபாட்டை இருமடி ஆகுபெயராய்க் குறிக்கத்தொடங்கியது; இறுதியில் கொற்றவை வழிபாட்டை அடியொற்றி எழுந்த 'பரணி'என்னும் இலக்கிய வகையை மும்மடி ஆகுபெயராய்க் குறித்து நின்றது என்று கூறலாம். எப்படியாயினும் 'பரணி' என்பது நாள்மீனால் வந்தபெயர் என்ற டாக்டர். உ.வே.சா. அவர்களின் கொள்கையே அமைவுடைத்தாகத் தோன்றுகிறது.

'பரணி' – என்பது யானைப்போர் வெற்றி என்று சிலவிடங்களில் வருதலால், அப்போர் வெற்றியைக் குறிக்கும் நூலுக்குக் கருவியாகுபெயராய் வந்தது என்பது ஒரு சாரார் கருத்து. 'பரண்' என்பது அடிச்சொல்; அச்சொலின் அடியாகப் பரணி என்று வந்தது என்றும் சிலர் கூறுவர். பரணி என்பது ஒரு கூத்தின் பெயர் என்றும், பேய்கள் பரணி இலக்கியத்தில் கூத்தாடுவதால் அப்பெயர் பெற்றது என்றும் பிறிதோர் சாரார் குறிப்பிடுவர். இவைகளும் இவை போன்று சொல்லாராய்ச்சி ஊகங்களாகக் கூறப்படும் கருத்துக்களும் பொருத்தமாக தோன்றவில்லை; அவை ஏற்றுக்கொள்ளத்தக்கனவல்ல; டாக்டர். உ.வே.சா. அவர்கள் கூறிய நாள்மீனால் வந்தபெயர் என்பதே பொருத்தமாக உள்ளது.

சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி

விருத்தப் பாவைத் திருத்தமுறப் பாடிய கம்பன் அப்பாவிலே பல்வேறு சந்த வேறுபாடுகளைத் தோற்றுவித்துக் கற்போர் உள்ளத்தைக் கவர்ந்து இழுப்பதைப் போன்று, கலித்தாழிசையில் சிந்தைக்கும் செவிக்கும் இனிய பாடல்களைச் சந்த இன்பம் சிறக்க இயல்பாகவும் அழகாகவும் பாடி வெற்றிகண்டவர் சயங்கொண்டார்; இவர் கவிச்சக்ரவர்த்தி என்றும் போற்றப்படுகிறார். முதற் குலோத்துங்கனின் அவைக்களப் புலவராகவும் சயங்கொண்டார் திகழ்ந்தார். இப் புலவர் கோமான் கி.பி. 11 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது கி.பி.12 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வாழ்ந்தவர் என்று தெரிகிறது. சோழநாட்டுத் **தீபங்குடி** இவரது பிறந்த ஊராகக் கொள்ளப்படுகிறது. புகார் நகரத்து வணிகர் பெருமக்களைச் சிறப்பித்து **'இசையாயிரம்'** என்ற நூலையும் இவர் இயற்றினார் என்பர். ஆனால் இவருக்குக் 'கவிச்சககரவர்த்தி' என்ற நிலையான பெயரையும் புகழையும் ஈட்டித்தந்த ஒப்புயர்வற்ற பரணி இலக்கியம் **கலிங்கத்துப் பரணியேயாகும்.** கலிங்கத்துப் பரணியில் '596' கலித்தாழிசைகள் உள்ளன. இத் தாழிசைகளைச் சந்த இன்பத்தோடு படிப்போர் கேட்போர் உணர்வோர் உள்ளத்தை ஈர்த்துப் பரவச மூட்டும் பான்மையில் அற்புதமாகப் சயங்கொண்டார் பாடியுள்ளார். எடுத்துக் –காட்டாகக் கலிங்கப்போர்த் தொடக்கத்தைக் கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார் காட்டுவதைக் காண்க.

'எடும்எடும் எடுமென எடுத்ததோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடுவிடு விடுபரிகரிக் குழாம்
விடும்விடும் எனுமொலி மிகைக்கவே' (404)

'வெருவர வரிசிலை தெரித்தநாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை அவரவர் தெழித்ததோர்
தெழிஉல குகள்செவி டெடுக்கவே'(405)

–என்று வருகின்ற தாழிசைகள் கலிங்கப்போர்த் தொடக்கத்தில் குதிரைப் படைகளும் யானைப்படைகளும் எழுப்பும் பேரொலி முழக்கத்தைக் காட்டுவதாக அமைகின்றன. படிப்போர் உள்ளத்தை ஈர்த்து இன்புறுத்தும் சந்த இன்பம் கனிந்த பாடல்களாக இலங்குகின்றன.

'பரணிக்கோர் சயங்கொணடார்' –என்று கலிங்கத்துப்பரணி ஆசிரியர் *பாராட்டப்படுவதற்கும்,* ***'தென்தமிழ் தெய்வப் பரணி'*** *–என்று கலிங்கத்துப்பரணி* போற்றப்படுவதற்கும் காரணம் இது போன்றதொரு பரணி இலக்கியம் இந்நூலுக்கு

முன்னரும் தோன்றவில்லை; பின்னரும் ஏற்படவில்லை என்பதாம். தமிழ் இலக்கிய உலகில் கலிங்கத்துப் பரணிக்கு இணையானதொரு பரணி இல்லை என்றே கூறலாம்.

ஒட்டக்கூத்தர் பாடிய 'தக்கயாகப்பரணி' தமிழ் உலகம் அறிந்த ஒன்று; இது சமயச் சார்புடையது. தமிழ்த் தாத்தா டாக்டர்.உ.வே.சா. இதைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இதைத் தவிர 'தமிழ்ப் பரணி', 'கொப்பத்துப் பரணி', 'கூடல் சங்கமத்துப் பரணி', 'கலைச்சிதம்பரேசுவரர் பரணி' முதலியன பெயரளவில் மட்டும் அறியப்படும் பரணி நூல்கள் என்பர். மேலும் தத்துவராயர் பாடிய 'அஞ்ஞவதைப் பரணி', வைத்தியநாத தேசிகர் பாடிய 'மோகவதைப் பரணி' போன்ற பரணி நூல்களும் தமிழில் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியாத 'இரணியன் வதைப் பரணி' 'திருச்செந்தூப் பரணி' அல்லது 'சூரன்வதைப் பரணி' என்பனவும் சமயக் கண்ணோட்டத்தில் எழுந்த பரணி நூல்களாகும். இருபதாம் நூற்றாண்டில் எழுந்த பரணி நூல்களில் கவிஞர் வாணிதாசன் பாடிய 'போர்ப் பரணியும்' பேராசிரியர் கவிஞர். மு.பி. பாலசுப்பிரமணியம் பாடிய 'சீனத்துப் பரணியும்' குறிப்பிடத்தக்கன. சயங்கொண்டாருக்கு முன்னரும் பின்னரும் எத்தனையோ பரணி நூல்கள் தோன்றியிருந்தாலும், தமிழில் எழுந்த பரணி இலக்கியங்கள் எல்லாவற்றிற்கும் **கலிங்கத்துப் பரணியே** மேல்வரிச் சட்டமாகக் கருதப்படுகின்றது. இந்நூல் கற்பனைக் களஞ்சியமாகவும் கவிதையின் ஊற்றாகவும் அணிநலத்தின் பிறப்பிட–மாகவும் சுவையின் இருப்பிடமாகவும் இசைபழுத்த தீங்கனியாகவும் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

கலிங்கத்துப் பரணி அரசர், படைத்தலைவர், வீரர் முதலியோரின் வரலாறு, புகழ் முதலியவற்றை விதந்து பேசுகிறது. செவி வழியாக வந்த வரலாற்றுச் செய்திகளுக்கு இலக்கியவடிவம் தரும் வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது. இலக்கிய நோக்கில் பார்த்தால் எத்தனை முறை படித்தாலும் மீண்டும் மீண்டும் படிக்கத்தூண்டும் ஒப்புயர்வற்ற இலக்கியமாகக் **கலிங்கத்துப் பரணி** சிறந்து விளங்குகிறது எனலாம்.

பாட்டுடைத் தலைவனும் படைத்தலைவனும்

கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் முதற் குலோத்துங்கன் பிற்காலச் சோழப் பேரரசின் மாமன்னர்களான முதலாம் இராசராசன், கங்கை கொண்ட சோழனான முதலாம் இராசேந்திரன் ஆகிய இருவரைப் போன்று பெரும்புகழ் படைத்த பேரரசனாகத் திகழ்ந்தான். இவன் கி. பி.1070 முதல் கி.பி. 1120 வரை ஏறத்தாழ 50 ஆண்டுகள் சோழவளநாட்டை திறம்பட ஆட்சி செய்தவன். இவன் சீனா, கடாரம், கம்போடியா முதலிய ஆசிய நாடுகளுடனும் தொடர்புகொண்டிருந்தான். முதற் குலோத்துங்கன் காலத்தில் சோழநாட்டிலிருந்து 72 பேர் கொண்ட தூதுக்குழு ஒன்று சீனாவிற்குச் சென்றதாகத் தெரிகிறது. நாட்டு மக்களின் நலங்கருதிச் சுங்க வரியை நீக்கினான் முதற் குலோத்துங்கன். எனவே இவனைச் **சுங்கம் தவிர்த்த சோழன்** என்று பொதுமக்கள்

பாரபட்டினர். மேலும் சோழவளநாடு முழுவதிலும் நிலங்களை அளக்கச் செய்து நிலவரியை ஒழுங்குபடுத்திய பெருமையும் முதற் குலோத்துங்கனைச் சாரும்.

முதற் குலோத்துங்கனின் இயற்பெயர் இராசேந்திரன் என்பதாம். சாளுக்கிய நாட்டிலே பிறந்து சோழவள நாட்டிலே வளர்ந்து இரு குலமும் விளங்கவந்தவன் என்பதால் இவனை '**உபய குலோத்துங்கன்**' என்றும் அழைத்தனர். கங்கைகொண்ட சோழனான முதலாம் இராசேந்திரன் மகள் 'அம்மங்கை' தேவிக்கும் சாளுக்கிய நாட்டு மன்னன் இராசராச நரேந்திரனுக்கும் மைந்தனாகப் பிறந்தவன் முதற் குலோத்துங்கன். தாய்மாமன் வீரராசேந்திரன் அரவணைப்பில் குலோத்துங்கன் வளர்ந்துவந்தான். வீரராசேந்திரன் இறந்த பிறகு அவன் மகன் அதிராசேந்திரன் அரசுரிமை எய்தினான். ஆனால் சில திங்களில் அதிராசேந்திரன் நோய்வாய்ப்பட்டு இறக்கநேரிட்டது. அப்பொழுது முதற் குலோத்துங்கன் சோழப்பேரசின் சார்பில் வடநாட்டிற்குப் போர்மேல் சென்றிருந்தான். அதிராசேந்திரன் இறந்த செய்தி அவனுக்கு எட்டியது. உடனே சோழநாடு விரைந்தான் குலோத்துங்கன். சோழநாட்டிற்கு வாரிசில்லாத நிலையில் கங்கைகொண்ட சோழனின் மகள் வயிற்றுப் பேரனான முதற் குலோத்துங்கனைச் சோழநாட்டு மன்னவனாக்க அமைச்சர்களும் படைத்தலைவர்களும் ஆட்சியாளர்களும் மக்களும் விரும்பியதால் அதை ஏற்றுச் சோழப் பேரரசனாக முடிசூடிக்கொண்டான் முதலாம் குலோத்துங்கன்.

இவன் பல்கலைச் செல்வன்; 'பண்டித சோழன்' என்று அறிஞர்கள் இவனைப் பாராட்டினர்; பிற மொழிகளிலும் இவனுக்கு நல்ல புலமை இருந்தது; இசையிலும் தேர்ச்சி பெற்றிருந்தான் முதற் குலோத்துங்கன். தம் ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னர்கள் அமைச்சர்கள் படைத் தலைவர்கள் முதலியவர்களில் குறிப்பிடத்தக்க 50 பேர்களைத் தேர்ந்தெடுத்து அரசியல் அதிகாரிகளாக்கித் திறம்பட சோழ வள நாட்டை ஆண்டுவந்தான் குலோத்துங்கன்.

இவனுடைய அரசியல் அதிகாரிகளில் தலைமை சான்றவன் கருணாகரத் தொண்டைமான். இவன் மிகச் சிறந்த படைத் தளபதியாகவும் இருந்தான். தொண்டைமான் என்பது இவனுக்குச் சிறப்புநோக்கித் தரப்பட்ட பட்டமாகும். கருணாகரத் தொண்டைமானைப் பல்லவர் குலத் தோன்றல் என்பர்; சோழ நாட்டு வண்டுவாஞ்சேரி எனப்படும் வண்டைநகர் இவனது சொந்த ஊராகும்.

வடகலிங்க மன்னனாகிய அனந்தவன்மன் இரண்டு முறை திறை செலுத்த வில்லை என்பதை அறிந்த முதல் குலோத்துங்கன் அனந்தபத்மனின் செருக்கை அடக்கி அவனை ஒடுக்க நினைத்தான்; தம் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமானிடம் குறிப்புக் காட்டினான்; அதைப் புரிந்து கொண்ட கருணாகரத் தொண்டைமான், அரசனின் இசைவு பெற்றுத் தாமே படைத்தலைமை ஏற்றுக் கலிங்கநாட்டைச் சூரையாடி வென்று,

அவ்வெற்றிக்கு அறிகுறியாக யானைகள், மாணிக்கக்குவியல்கள், அளவற்ற செல்வங்கள் முதலியவற்றைத் தம் பேரரசனான முதற் குலோத்துங்கனிடம் காணிக்கையாக்கி, வெற்றி பெருமிதத்தோடு நின்றான். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கலிங்க வெற்றியைச் சிறப்பித்துப் பாடும் போர்க் காப்பியமாகக் கலிங்கத்துப்பரணி இலங்குகின்றது. தோல்வியைத் தழுவிய கலிங்க நாட்டின் பெயராலேயே இப்பரணி சார்த்தி வழங்கப்படுகிறது. பரணி இலக்கியங்கள் பலவும் தோற்றவர் பெயரால் அமைந்து, வென்றவர் புகழ் பேசுவதாக அமைந்துள்ளன. **தக்கயாகப் பரணி, சூரன் வதைப் பரணி, இரணியன் வதைப் பரணி** போன்றவைகளும் தோல்வியைத் தழுவியவர்களின் பெயரால் அமைந்து, வென்றோர் புகழ்பாடும் இலக்கியங்களாக இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நூலமைப்பும் சிறப்பும்

கலிங்கத்துப் பரணியில் 13 பகுதிகள் இடம்பெற்றுள்ளன. அவைகள் முறையே வருமாறு:- 1.கடவுள்வாழ்த்து, 2.கடைதிறப்பு, 3.காடு பாடியது, 4.கோயில் பாடியது, 5.தேவியைப் பாடியது, 6.பேய்களைப் பாடியது, 7.இந்திரசாலம், 8.இராசபாரம்பரியம், 9.பேய் முறைப்பாடு, 10.அவதாரம், 11.காளிக்குக் கூளி கூறியது, 12.போர் பாடியது, 13.களம் பாடியது. இப் பதின்மூன்று பகுதிகளையும் தெளிவாக அறிந்துகொள்வது படிப்போர்க்கு மிகவும் நல்லது.

1. கடவுள் வாழத்து

பாட்டுடைத் தலைவனாகிய முதற்குலோத்துங்கன் நெடிது நின்று வாழவேண்டி சிவபெருமான், திருமால்,நான்முகன்,ஞாயிறு, யானைமுகன், அறுமுகக் கடவுள்,நாமகள் உமையம்மை, ஏழு அன்னைமார் ஆகிய கடவுளரை வாழ்த்துகின்ற பகுதியாகையால் '**கடவுள் வாழ்த்து**' எனப்பட்டது.

சயங்கொண்டார் இக்கடவுளர்களோடு பாட்டுடைத் தலைவனாகிய முதற் குலோத்துங்கனை ஒப்புமைப்படுத்திச் சிறப்பித்துப்பாடி வாழ்த்துவதும் நோக்கத்தக்கது. விளைவைப் பெருகச் செய்யும் மழைவளம் பொழிகவே என்றும், நிதியைப் பெருகச் செய்யும் பயிர்வளம் நிறைகவே என்றும், பொதுவகையால் வாழ்த்துக் கூறுவதோடு, பாட்டுடைத் தலைவன் குடிவழியாகிய சோழர்குடியும் அவர்தம் புலிக்கொடியும்,மக்களின் பாதுகாப்பிற்கு அறிகுறியாக விளங்கும் அரசனின் வெண்கொற்றக் குடையும் வளர்கவே என்றும் வாழ்த்துகின்றார் கவிஞர்.

கடவுள் வாழ்த்தில் '20' கலித்தாழிசைகள் இடம்பெற்றுள்ளன; ஒவ்வொரு தாழிசையும் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம். மண்மடந்தையும் புகழ் மடந்தையும் குலோத்துங்கன் புயங்களில் பொலிந்து வாழ்வதாகவும், அவர்களைக் காட்டிலும் 'மிக உயரத்தில் இருப்பேன்'–என்று நினைத்த

கலைமகள் குலோத்துங்கன் நாவகத்தே தலைமைச் சிறப்போடு வீற்றிருப்பதாகவும் கற்பனை நலம் சிறக்கவும் கவிதைச் சுவை ததும்பவும் சயங்கொண்டார் நாமகள் வாழ்த்துக் கூறுவது மிகவும் நயமாகவுள்ளது.

'பூமாதும் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்திருப்ப 'மிக உயரத்(து) இருப்பன்' என்று
நாமாதும் கலைமாதும் என்னச் சென்னி
நாவகத்துள் இருப்பாளை நவிலுவாமே'
–என்பது சிறப்பாகவுள்ளது.

2. கடை திறப்பு

போர்க்களம் சென்ற வீரர்கள் திரும்பிவரக் காலதாமதம் ஏற்பட்டதால் கவலையுற்று ஊடிக் கதவுகளைத் தாழிட்டுக் கொண்ட அவர்தம் மனைவியரைக் கலிங்கப் போர் வெற்றியைப் பாடி மகிழ்வதற்குக் கதவைத் திறந்திடுமாறு முதற் குலோத்துங்கன் நகரில் வாழும் பல்வேறு மகளிரும் வாயிற்கடை நின்று வேண்டிக் கொள்வதாக அமையும் பகுதியைக் '**கடைதிறப்பு**' என்று கூறலாம்.

தாழிட்ட கதவைத் திறந்திடுமாறு ஊடிய மகளிரைக் கவியரசர் சயங்கொண்டார் வேண்டிக்கொண்டார் என்று கொள்வதைக் காட்டிலும், குலோத்துங்கன் பட்டினத்து வாழும் மகளிர் ஒருவரை ஒருவர் வேண்டிக் கொள்வதாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. எனவே மகளிர் கூற்றில் அமைத்து, கடைதிறப்புப் பகுதியைப் பாடியுள்ளார் சயங்கொண்டார் என்று கருதலாம்.

கடை திறப்பில் 54 தாழிசைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு தாழிசையும் காதல் சுவைநலம் கனியவும் கற்பனைத் திறன் சிறக்கவும் அற்புதமாகப் பாடப்பட்டுள்ளது.

'மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்' – என்பது வள்ளுவார் வாக்கு.

காதலின் மென்மைத் தன்மையையும் உண்மைத் தன்மையையும் உணர்ந்து கடைதிறப்புப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. திருக்குறள் காமத்துப் பாலைப் போன்று கலிங்கத்துப் பரணியின் கடை திறப்பும் மிகச் சிறந்த இலக்கியமாக இலங்குகின்றது என்றால் அது மிகையாகாது.

இரண்டு அல்லது மூன்று எடுத்துக்காட்டுகளைக் கூறினால் ஏற்புடையதாக இருக்கும். கள்ளுண்டு களித்தவர் தாம் என்ன செய்கிறோம் என்பதையும் அறியாது, ஒன்றுகிடக்க பிறிதொன்றைச் செய்து பார்ப்பவர் நகைப்பிற்கு ஆளாகி நிற்பர். இப்படித்தான்

கலவி மயக்கத்தில் நிலா முற்றத்தில் ஆடை குலைந்து நிற்கும் நங்கை ஒருத்தி – நிலவொளியை ஆடை என்று நினைத்து அதையே எடுத்து உடுத்த முயல்வதாகச் சொல்லோவியஞ் செய்துள்ளார் சயங்கொண்டார்.

'கலவிக் களியின் மயக்கத்தால்
கலைபோய் அகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென்று எடுத்துடுப்பீர்
நீள்பொற் கபாடம் திறமினோ' (34) – என்பது நோக்கத் தகும்.

கடை திறப்பில் பெண்களின் நடையழகை இசையழகுடன் காட்டுகிறார் கவிஞர்.

'சுரிகுழல் அசைவுற அசைவுற
துயில்எழும் மயில்என மயில்எனப்
பரிபுரம் ஒலிஎழ ஒலிஎழ
பனிமொழி யவர்கடை திறமினோ'(23) இங்குப் 'பரிபுரம்'என்பது மகளிர் காலில் அணியும் அணியாகிய கிண்கிணியைக் குறித்து நிற்கின்றது. அவர்களின் சுருண்ட குழல்கள் அசைவுறவும் ,காலில் அணிந்துள்ள கிண்கிணிகள் மீண்டும் மீண்டும் ஒலிக்கவும், துயில் எழும் மயில்கள் போன்று பெண்கள் அசைந்து ஆடி நடந்துவருவதாகக் காட்டியுள்ளார் கவிஞர்.

'வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் எனஅடையுத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ'(69) –என்று கற்பனை நயம் சிறக்கச் சயங்கொண்டார் பாடுவதும் காணத்தகும். குடுமி–என்பது கதவின் கடையாணி; கொழுநர்– கணவர். போர்மேற் சென்ற தம் கணவர்மார் வருவர்– வருவர் என்று வழிமேல் விழிவைத்திருந்த அவர்தம் மனைவியர் கதவைத் திறப்பதும், வாரார் வாரார் என்று மனம் தளர்ந்து அடிக்கடி கதவை மூடுவதும் தொடர்ந்து நடைபெறுவதால் கதவின் கடையாணிகள் தேய்ந்து போய்விட்டனவாம்.

முன் செல்வம் இல்லாத ஏழை ஒருவனுக்கு எதிர்பாராத வகையில் பெரும்புதையல் ஒன்று கிடைத்துவிட்டால் அவன் என்ன செய்வான்? யாரும் இல்லாத போது அதைத் திறந்து பார்ப்பான்; யாரும் பார்த்துவிடுவாரோ என்று நினைத்து அதை உடனே மூடிவைப்பான்; தனக்குத் தானே மகிழ்ந்து நிற்பான். இது போன்றே தம் கணவன்மார் பதித்த நகக்குறி கண்டு தமக்குத் தாமே மூடியும் திறந்தும் காதற் பெண்டிர் மகிழ்வதாகக் காட்டிள்ளார் சயங்கொண்டார் (47).

'காஞ்சி' என்பது பெண்கள் இடையில் அணியும் அணியையும், 'காஞ்சி' மாநகரத்தையும் குறிப்பதாகவும், 'கலிங்கம்' என்பது உடுத்தும் ஆடையையும் கலிங்க நாட்டையும் உணர்த்துவதாகவும் கொண்டு இருபொருள் தரும் சிலேடை அணிநலஞ் சிறக்க சயங்கொண்டார் சிறப்பாகப் பாடுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ" (63)–என்பது கவிஞர் வாக்கு.

3. காடு பாடியது

'காடு'என்பது இங்கு வளங்குன்றி வறண்ட பாலை நிலத்தையும் அப்பாலை சார்ந்த சுடுகாட்டையும் குறிக்கின்றது. பாலை நிலத்தின் வெம்மைக் கொடுமையும் சுடுகாட்டின் தன்மையும் இம் மூன்றாம் பகுதியில் விளக்கப்படுகின்றன. எனவே இப்பகுதி **'காடு பாடியது'** எனப்பட்டது. **காளிதேவி** – 'காடுகெழு செல்வி' என்று கூறப்படுகிறாள்; அத்தேவி உறையும் பாலைநிலத்தைச் சித்திரிக்கின்றார் சயங்கொண்டார்; இப்பகுதியில் '22' தாழிசைகள் இடம்பெற்றுள்ளன.

பொரிந்துபோன காரைச்செடிகளும், கரிந்துபோன சூரைச் செடிகளும் மேற்பட்டை உரிந்துபோன பாரை என்னும் மரங்களும், முறிந்துபோன பாலை மரங்களும், காய்ந்துபோன ஓமை என்னும் மரங்களும் கலந்து காணப்படும் நீர்வளம் நிலவளம் குன்றிய–வெம்மையே உருவாயக் காட்சிதருகின்ற நிலப்பகுதியை(76) - 'பாலை' என்று சயங்கொண்டார் காட்டியுள்ளார்.

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து–வளம் குன்றி வறண்டு பாலை நிலமாகப் படிவம் கொள்வதை இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் காட்டியிருப்பதும் இங்கு எண்ணத்தக்கது. தமிழில் பாலை நிலம் என்றுதான் கூறவேண்டும்; பாலை வனம் என்று கூறுவது தமிழ் மரபன்று.

செந்நெருப்பினைத் தகடுகளாகச் செய்து போர்த்தது போன்று பாலை நிலம் காட்சி தருகின்றது என்றும், அந்நெருப்புத் தகடுகளிலிருந்து எழுந்து செல்லும் புகை போன்று புறாக்கள் பறந்து செல்கின்றன (82) –என்றும் சித்திரிகின்றார் கவிஞர்

பாலை நிலத்தில் பருந்து பறந்து செல்கின்றது; பறக்கும்பொழுது பருந்தின் நிழல் ஓடுவது போன்று தோன்றும்; இக்காட்சியைத் தற்குறிப்பு ஏற்றமாகக் கொண்டு, பாலை நில வெயிலின் கொடுமையைக் கண்டு பருந்தின் நிழல் அஞ்சி ஓடுகிறது என்றும், ஓடும் நிழல் அன்றி நிற்கும் நிழலை எங்கும் பாலை நிலத்தில் காணமுடியாது (80) –என்றும் நயம்படக் கூறுவர் சயங்கொண்டார்.

4. கோயில் பாடியது

'கோயில்' – என்பது இங்குப் போர்க்குரிய தெய்வமாகிய கொற்றவை அல்லது காளிதேவி குடிகொண்டுள்ள திருக்கோயிலைச் சுட்டுகின்றது. இதில் '24' தாழிசைகள் இடம்பெற்றுள்ளன. பொதுவாகப் பழங்காலத்துக் கோயில்கள் மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பட்டன. பல்லவர் காலத்துக் கோயில்கள் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டன; பிற்காலச் சோழர் கோயில்கள் கல்லை அடுக்கிக் கட்டப்பட்டன.

காளிகோயில் கட்டுவதற்குச் சோழ வேந்தர்களின் வீர வாளுக்கு இரையான பகையரசர்தம் பட்டத்தரசிகள் அணிந்திருந்த இரத்தினக்கற்கள் அடித்தளமாக அமைந்தன. போரில் மாண்ட வீரர்களின் கொழுப்பே சாந்தாகக் கொள்ளப்பட்டு அவர்களுடைய இரத்தமாகிய தண்ணீர்விட்டுக் குழைத்து மாண்ட வீரர்களின் தலைகளாகிய செங்கற்களைக் கொண்டு காளிகோயிலின் சுவர்கள் எழுப்பப்பட்டன. போரில் தோற்ற பகையரசர்களின் கணைய மரங்கள் காளிகோயிலுக்குரிய தூண்களாகவும் உத்திரங்களாகவும் அமைந்தன. கோபுரமும் நீண்ட மதிலும் இறந்துபட்ட வீரர்களின் எலும்பாலானது; வீழ்ந்துபட்ட அரசர்களின் கொடிகளைக் கொண்டு காளிகோயிலின் மேற்கூரை வேயப்பட்டது. இவ்வாறு காளிகோயில் கட்டப்பட்டது என்றும் கோபுரங்களைப் பேய்கள் காக்கின்றன என்றும் சயங்கொண்டார் கற்பனை செய்துள்ளார். கோயிலின் நுழைவாயில் முதல் கொற்றவையாகிய காளிதேவி வீற்றிருக்கும் மூலத்தானம் வரை இறந்துபட்ட வீரர்களின் உடல்களே காணப்படுகின்றன என்றும் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

பலியிடுவோரால் அறுக்கப்பட்ட தலைகள் கோயிலின் முன்புள்ள மூங்கில்களில் தொங்குகின்றன; காற்றடிப்பதால் மூங்கில்கள் வளைந்து வளைந்து ஆடுகின்றன; மண்ணில் இரத்த ஆறு ஓடுகின்றது; இரத்த ஆற்றில் தலையற்ற முண்டங்கள் மிதிந்து வருகின்றன; இரத்த வெள்ளத்தில் கிடக்கும் முண்டங்களாகிய மீன்களை யமனனாகிய தூண்டில்காரன் தூண்டில் போட்டுப் பிடிப்பதுபோல் உள்ளது என்று சயங்கொண்டார் படைத்துக்காட்டியுள்ளார்.

> "அரிந்ததலை உடன்அமர்ந்தே ஆடுகழை
> அனல்குருதிப் புனலில் மூழ்கி
> இருந்தஉடல் கொளக்காலன் இடுகின்ற
> பெருந்தூண்டில் என்னத் தோன்றும்" –(118) என்பது கவிஞர் வாக்கு

நீண்ட பலிபீடத்தில் வீரர்கள் தங்கள் சிரங்களை அறுத்துக் காணிக்கையாகக் காளிதேவிக்குப் படைத்தனர். அறுத்து வைக்கப்பட்ட வீரர்களின் சிரங்களைத் தம் இனம் என்று கருதி ஆண்டலைப் புள் அருகில் வருகின்றது. தலைகள் ஆண்டலைப் புள்ளை அச்சுறுத்துகின்றன. ஆண்டலைப் புள்கள் அஞ்சி ஓடுகின்றன (112).

காளிகோயில் அமைப்பு, வீரர்களின் வீரமரணம், அவர்கள் தலைகளை அறுத்துவைத்தல், தலைகள் மூங்கிலில் அசைந்தாடுதல், அறுத்துவைக்கப்பட்ட வீரர்களின் தலைகள் அச்சுறுத்துவதால் ஆண்டலைப் புள் அஞ்சி ஓடுதல், முண்டங்கள் மிதந்து வருதல் முதலிய காட்சிகள் தத்துவரூபமாக அச்சமும் வியப்பும் மேலோங்கக் காட்டப்பட்டுள்ளன.

5. தேவியைப் பாடியது

இங்குத் 'தேவி' என்பது கோயிலில் குடிகொண்டிருக்கும் காளியைக் குறிக்கிறது. இப்பகுதியில் 13 தாழிசைகள் உள்ளன. அவைகளில் காளி அணிந்திருக்கும் காற்சிலம்பு, திலகம், அவளது கூந்தல், அவளது கொங்கை, உடை , வயிறு, மேலாடை, கை, உதடு, முகம், காதணி, மாலை முதலியவற்றின் சிறப்பு விளக்கப்படுகிறது. காளிதேவியின் பேருருவச் சிறப்பு சந்த இன்பமும் வியப்பும் தோன்றக் கூறப்பட்டுள்ளது. பிரமன், திருமால் , யானைமுகன், முருகன் ஆகியயோரைப் பெற்றெடுத்த சிறப்பும் காளிதேவியின் திருவயிற்றுக்கு உண்டு என்கிறார் சயங்கொண்டார்.

6. பேய்களைப் பாடியது.

காளிதேவியின் பரிவாரங்களாகிய பேய்களின் கை, கால், வயிறு, முழந்தாள், உடம்பு,கன்னம், கண், முதுகு, உந்தி, மூக்கு, செவி, பல், தலை, உதடு, பேய்கள் அணியும் தாலி முதலியவற்றை நகைச்சுவை நலஞ் சிறக்கவும் உவமையணி சிறப்பாக அமையவும் இப்பகுதியைப் பாடியுள்ளார் சயங்கொண்டார்; இதில் 19 தாழிசைகள் உள்ளன.

பேய்களின் பற்கள் மண்வெட்டியையும் கலப்பையையும் கோத்தாற் போன்று உள்ளன என்றும், பாம்பில் ஒந்தியைக் கோற்றாற் போன்று பேய்களின் தாலி அமைந்துள்ளது என்றும், பேய்கள் வானைத் தட்டித் தகர்க்கும் தலையை உடையன என்றும், பேய்களின் உதடுகள்ள மார்புவரை தொங்குவன என்றும் கவிஞர் பேசுகிறார்(14).

கால் முடமான பேயும், ஊமைப் பேயும், செவிட்டுப் பேயும், குறளைப் பேயும் எனப் பலவகைப் பேய்களைப் படிப்போர் சிரித்து மகிழுமாறும் கூறியுள்ளார் கவிஞர். மதுரைப் போர்க்களத்தே பொன்னி நாடனான சோழனை வாழ்த்திப் பேய்கள் களக்கூழ் சமைத்தன. கொதிக்கும் கூழை ஆசையாலும் பசியாலும் அவசரப்பட்டு உண்டதால் நாச்சுருண்டு பல பேய்கள் உமைகளாகிவிட்டன என்றும் நகைச்சுவை ததும்பக் கூறுவர் சயங்கொண்டார் (148).

7. இந்திர சாலம்

காளியின் கோபத்திற்கு ஆளாகிச் சிலகாலம் இமயத்தில் வாழுந்துவந்த முதுபேய் ஒன்று அங்குத் தான் கற்ற இந்திரசால வித்தைகளை வியப்புறக் காட்டுவதாக அமையும் பகுதி **இந்திரசாலம்** எனப்பட்டது.

தலையணைகள் பரப்பிய கட்டிலிலே காளிதேவி அமர்திருக்கிறாள். இடாகினிப் பேய்கள் தேவியின் இருபுறமும் நின்று அவளுக்குக் கவரி வீசுகிறன்றன. அப்போது நெடும்பேய் ஒன்று காளி தேவி முன் வந்து நின்று வணக்கம் கூறுகிறது. அப்பேய் காளிதேவியிடம் கூறுகிறது- 'தேவி உமது கோபத்திற்கு ஆளாகி இமயம் சென்று மறைவாக வாழ்ந்திருந்த முதுபேய் ஒன்று வாயிலிலே காத்து நிற்கிறது; அப்பேய் அன்னையை மீண்டும் காண வேண்டுமாம்'. காளிதேவி –'அப்பேயை வரச்சொல்' என்று கூற, அந்த முதுபேய் காளிதேவியின் முன்பு வந்து பணிந்து நின்று, இமய மலையில் தான் கற்ற இந்திரசால வித்தையைக் காட்டுகிறது. இப்பகுதியில் 25 தாழிசைகள் உள்ளன. நகைச்சுவையும் வியப்புச்சுவையும் சிறக்க இப்பகுதி பாடப்பட்டுள்ளது.

8. இராசபாரம்பரியம்

இந்திர சாலமாகிய கண்கட்டு வித்தை காட்டிய முதுபேய் இமயத்தில் வாழ்ந்தபோது கரிகாலன் இமயம்வரை படையெடுத்து வந்து, செண்டு கொண்டு இமயத்தை அடித்து அடக்கி அதில் தம் புலிக் கொடியைப் பொறித்தான் என்றும், அங்கு வந்த நாரதர் சோழர் குடிவழியைக் கரிகாலனுக்குக் கூறினார் என்றும், திருமாலே சோழர் குடியில் குலோத்துங்கன் வடிவில் தோன்றுவார் என நாரதர் கூறினார் என்றும், நாரதர் கூறிய சோழர் குடிவழி வரலாற்றைக் கரிகாலன் இமயத்தில் பொறித்துவைத்தான் என்றும் முதுபேய் காளிக்குக் கூறுவதாக இப்பகுதி அமைகின்றது. இதில் 34 தாழிசைகள் உள்ளன. முதற்குலோத்துங்கனான அபயனின் பிறப்பும்(206), அவனது வெற்றிச் சிறப்பும் (207) இப்பகுதியில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன.

9. பேய் முறைப்பாடு

'முறைப்பாடு' என்பது குறைகளைக் கூறி அவைகளைத் தீர்த்து வைக்கும்மாறு முறையிட்டுக்கொள்ளுதல் என்று பொருள்படும். காளி தேவியைச் சுற்றியுள்ள பேய்கள் தங்கள் பசிக்கொடுமையாகிய குறையினைக் காளிதேவியிடம் கூறி முறையிட்டுக்கொண்ட பகுதியாகையால் இப்பகுதி **பேய் முறைப்பாடு** என்று பெயர்பெற்றது.

குறைகளை முறையிடும் பேய்கள் காளிதேவியிடம் தாங்கள் கண்ட போர் நிமித்தங்களை கூறுகின்றன. இமயத்திலிருந்து வந்த முதுபேய் கலிங்க நாட்டின் வழியாக வந்தபோது சில தீய நிமித்தங்களைத் தான் கண்டதாக காளிதேவியிடம் கூறியது. கணிதப்பேய் தான் கனவிலும் நனவிலும் கண்ட நிமித்தங்களைத் தேவியிடம் கூறியது. இம் மூன்று போர் நிமித்தங்களையும் சீர்தூக்கிப் பார்த்த காளிதேவி கலிங்க நாட்டில் ஒரு பெரும்போர் விரைவில் நிகழும் என்றும், அதனாலே பேய்களின் பசிக்கொடுமை அகலும் என்றும் கூறி, வாடிய பேய்களை உற்சாகமூட்டி ஆறுதல் கூறியது. அதுகேட்ட பேய்கள் கூத்தாடி மகிழ்ந்தன என்று சயங்கொண்டார் கூறுவர். இப்பகுதியல் 20 தாழிசைகள் வருகின்றன. கலிங்கப் போர் நிமித்தங்களைக் கவிஞர் நயமாகவும் சுவையாகவும் இப்பகுதியல் எடுத்துக் கூறியுள்ளார் என்பது குறிப்பிட்டதக்கது.

10. அவதாரம்

இப்பகுதியில் பாட்டுடைத் தலைவனாகிய முதற் குலோத்துங்கன் பிறப்பையும் வளர்ப்பையும் இளவரசுப்பட்டப் எய்தியதையும் முடிசூடிக் கொண்டதையும் அழகுறக் கவிஞர் காட்டியுள்ளார். இதில் 80 தாழிசைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் முதற் குலோத்துங்கன் ஆட்சியின் மாட்சி, காவிரிக்கரையில் பாரி வேட்டையாடி முடித்துப் பரிவாரங்கள் புடைசூழப் பாலாற்றங் கரைக்குச் சென்று வேட்டையாடி விட்டுக் காஞ்சிமாநகர் அடைதல், அங்கு முத்துப் பந்தரில் வீற்றிருத்தல், தேவிமார் இருவரும் இருபக்கமும் அமர்ந்திருந்தல் முதலியவற்றைக் காளிதேவி பேய்களுக்குச் சொல்வதாக இப்பகுதி அமைகிறது. கலிங்கத்தில் போர்முண்ட செய்திகளைக் கலிங்கப்பேய் காளிதேவிக்குத் தெரிவிக்கிறது; செய்திக்கேட்டுப் பேய்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றன.

சோழநாட்டில் இருள்சூழ்ந்த வேளையில் கதிரவன் தோன்றுவது போன்று முதற் குலோத்துங்களான அபயன் தோன்றினான் என்பர் சயங்கொண்டார் (261).

11. காளிக்குக் கூளி கூறியது

காளிதேவிக்குக் கூளியாகிய கலிங்கப்பேய் போர்காரணத்தைக் கூறிய பகுதி **காளிக்குக் கூளி கூறியது** எனப்படும். இப்பகுதியில் 92 தாழிசைகள் உள்ளன.

பாலாற்றங் கரையில் பாரி வேட்டையை முடித்துக்கொண்டு காஞ்சி வந்த முதற் குலோத்துங்கன் தம் இருதேவியருடன் இசைக் கூத்தைப் பாரத்து ரசித்தக் கொண்டிருந்தான். கருணாகரத் தொண்டைமான் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் அரசனைச் சூழ்ந்திருந்தனர். திறை செலுத்த வந்த மன்னர்கள் அரசனுக்கு வணக்கம் கூறிச் செலுத்தினராக, வடகலிங்க மன்னன் அனந்தவன்மன் மட்டும் இரண்டுமுறை திறை செலுத்த வில்லை என்பதை அறிந்துக்கொண்ட முதற் குலோத்துங்கன், குறிப்பாகக் கருணாகரத் தொண்டைமானை நோக்கினான்; அரசன் குறிப்பை அறிந்துகொண்ட கருணாகரன் ‘நானே படைகொண்டு சென்று அனந்தவன்மன் செறுக்கை அடக்கி அவனை ஒடுக்கி கலிங்கம் எறிந்துவருகிறேன்’ என்று கூறித் தாமே நாற்படைகளுக்குத் தலைமை ஏற்று நிற்க, நாற்படைகளும் ஆர்ப்பரித்துச் சென்றன என்பதை இப்பகுதி காட்டுகிறது.

12. போர் பாடியது

பன்னிரண்டாவது பகுதி போர் பாடியது ஆகும். இப்பகுதியைக் கலிங்கப் பேயின் கூற்றாக அமைத்துப் பாடியுள்ளார் கவிஞர். படைகளின் போர் முழக்கத்தையும், இருபடைகளும் மோதுகின்ற தன்மைகளையும், பிணமலை குவிதையையும், கருணாகரன் படைக்கு எதிர் நிற்க முடியாமல் அனந்தவன்மன் மறைந்து பதுங்கி ஒடுவதையும் கலிங்க வீரர் பலரும் உருக்கரந்து நாற்புறமும் சிதறித் தப்பி ஓடும் காட்சிகளையும் – சந்த இன்பம் மேலோங்கவும் கற்பனை நயம் சிறக்கவும் அற்புதமாகப் போர்களத்தைச் சித்தரித்துள்ளார் கவிஞர். இப்பகுயில் 68 தாழிசைகள் அமைந்துள்ளன. போர்க்களம்

எங்கும் இரத்த ஆறு ஓடுகின்றது; வெட்டுண்ட யானைகளின் உடல்கள் குருதியாற்றின் இருபுறமும் கரைபோன்று அமைந்து கிடக்கின்றன; தோல்வியுற்ற அரசர் குடைகள் குருதியாகிய ஆற்றில் நுரைபோன்று மிதக்கின்றனவாம்! இக்காட்சியை சயங்கொண்டார்

'குருதியின் நதிவெளி பரக்கவே
குடையினம் நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுடல் அடுக்கியே
கரையென இருபுடை கிடக்கவே' (410) என்று அழகாகச் சொற்சித்திரம் செய்துள்ளார்.

வீரர்களும் வீரர்களும், அரசர்களும் அரசர்களும் தனித்தனியே மோதுகின்றனர். இக்காட்சி புலி புலியோடு மோதுவது போலவும், சிங்கம் சிங்கத்தோடு அடர்ப்பது போலவும் காணப்படுவதாகச் கவிஞர் காட்டுகின்றார்.

'பொருபுலி புலியோடு சிலைத்தபோல்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியொடு அரியினம் அடர்ப்பபோல்
அரசரும் அரசரும் அடர்க்கவே' (408)– என்று வருதல் காணத்தகும்.

13. களம்பாடியது

பேய்க் கணங்கள் சூழ்ந்துவரப் போர்க்களத்திற்குக் காளிதேவி சென்று அக்களத்தில் காணப்படும் காட்சிகளை ஒவ்வொன்றாக ஒவ்வொரு பேயும் உணருமாறு காட்டுகிறாள்; அடுத்துப் பேய்களைக் களக்கூழ் சமைத்து உண்ணும்மாறு பணிக்கிறாள் தேவி; தேவியின் கட்டளைக்கு ஏற்பப் பேய்கள் களக்கூழ் சமைக்கும் காட்சியையும், சமைத்த கூழைப் பேய்கள் உண்ணும் காட்சிகளையும் நகைச்சுவை நலங்கனியச் சொல்வோவியமாகக் காட்டுகிறார் கவிஞர். களக்கூழ் சமைத்து உண்ட பேய்கள் கூத்தாடி மகிழ்ந்து வள்ளைப் பாட்டால் முதற்குலோத்துக்கன் புகழ்பாடி வாழ்த்தும் காட்சியும் இப்பகுதியில் இடம்பெறுகின்றது. இதில் 125 தாழிசைகள் வருகின்றன.

குருதி வெள்ளத்தில் யானைகள் மிதந்துவரும் காட்சி குறிப்பிடத்தக்கது. யானைகள் ஒன்றன்பின் ஒன்றாய்க் குருதிவெள்ளத்தில் மிதந்து வருவது கடலின் மீது மரக்கலங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மிதந்து செல்வது போன்றிருக்கிறது என்று காட்டியுள்ளார் கவிஞர் (475).

போரில் மாண்டுகிடக்கும் வீரர்களின் உடலைப் பருத்தினமும் கழுகினமும் உண்ண உண்ண, வீரர்களின் தாமரை மலர் போன்ற முகங்கள் மேலும் மேலும் மலர்கின்றவாம். இக்காட்சி விருந்துபேணும் தமிழ்ச்செல்வர் வளமனையில் விருந்தினரும் வறியவரும் உண்ண உண்ண மென்மேலும் முகமலரும் மேலோர் பேல இருந்தது (407) என்று அற்புதமாகக் காட்டுகிறார் கவிஞர்.

பல்துலக்கிவிட்டுத்தான் களக்கூழ் உண்ணவேண்டும் என்று பேய்களுக்குக் காளிதேவியின் கட்டளை பிறக்கிறது. எப்படித் துலக்கவது? எதைக்கொண்டு துலக்குவது? இதற்குரிய விடையும் காளிதேவியால் தரப்படுகிறது. நாக்கை எப்படி எதைக்கொண்டு வழிக்கவேண்டும் என்றும் காளிதேவி கூறுகிறாள்; இதோ அந்தக்காட்சி!

"பறித்த மருப்பின் வெண்கோலால்
பல்லை விளக்கிக் கொள்ளீரே
மறித்த களிற்றின் பழுஎலும்பை
வாங்கி நாக்கை வழியீரே" – என்பது நோக்கத்தகும்.

வீழ்ந்துக்கிடக்கும் யானையின் மருப்பையே பற்குச்சியாகக் கொள்க என்றும், இறந்துபட்ட யானையின் விலா எலும்பைக் கொண்டு நாக்கு வழித்திடுக என்றும் தேவி பேய்களுக்குக் கட்டளை இடுகிறாள்.

வள்ளைக் கூத்தில் குலோத்துங்கள் புகழ்பாடி பேய்கள் குற்றுகின்றன. சேரரும், பாண்டியரும் முதற் குலோத்துங்கனிடம் வணங்கிய செய்திகளைக் கூறிப் பேய்கள் குற்றுகின்றனவாம்.

'வணங்கிய சேரர் மணிமுடியும்
வழுதியர் தங்கள் மணிமுடியும்
பிணங்கிய சேவடி பாடீரே
பெருமான் திருவடி பாடீரே' (530) என்று வருதல் காண்க.

பேராசிரியர் டாக்டர். பெரு. தியாகராசன்
பதிப்பாசிரியர்

EDITOR'S INTRODUCTION

The Basis of War Poetry (*Paraṇi Literature*) in Tamil

In the ancient land of the Tamils, there has been a custom to worship the Goddess of victory (*Koṟṟavai*), and this has been in vogue even before the time of Tolkāppiyar, as seen from *Tolkāppiyam* and its commentaries. The ancient Tamils known for their courageous valour, during the time of *Koṟṟavai* worship, would hail their king as their leader, thereby singing the victory of battle field. This ancient Tamil tradition of worshipping the goddess of victory (*Koṟṟavai)* forms the basis of *Paraṇi Literature* (war poetry).

***Paraṇi* – What the name signifies**

Of all the interpretations given to the term *Paraṇi* the one given by Dr. U. Vē. Cā , the great Tamil savant, in his introduction to the first edition of *Takkayākap Paraṇi*, seems quite appropriate. He says that the word *Paraṇi* signifies the star that has Kāḷi and Yama as its gods. It is quite clear that the word *Paraṇi* fundamentally denotes the star and then it was used to signify the day the star appears. In the second stage, it seems that the word *Paraṇi* was used to indicate the worship of *Koṟṟavai* as it was performed on the *Paraṇi* day. In the third stage, the word *Paraṇi* came to denote specifically the war song, a species of composition in praise of a great hero-warrior who has killed thousand male elephants in the battle filed.

The great Poet Cayaṅkoṇṭār

The author of *Kaliṅkattup Paraṇi,* the great poet Cayaṅkoṇṭār, was the master of *Paraṇi* poetry (war poetry) in Tamil. He has been hailed as the emperor of poets. It seems that the poet Cayaṅkoṇṭār was a contemporary of the I Kulōttuṅkaṉ and most probably, he would have lived around the last phase of the 11th century A.D or the first phase of the A.D 12th century (1070 to 1120 A.D.). It is said that the poet Cayaṅkoṇṭār also composed a poem entitled ' Icai Āyiram' eulogizing the rich merchants of Pūmpukār city. But his fame as a great poet mainly rests on his poetical composition - *Kaliṅkattup Paraṇi* which consists of 596 rhythmic verses that draws the attention of the readers. The title *Paraṇikkōr*

Cayaṅkoṇṭār is a pointer to the fact that such a literature pertaining to war poetry did not arise in Tamil before the composition of *Kaliṅkattup Paraṇi* nor has it arisen after its composition. It can be rightly said that there has been no literary work on war poetry in Tamil as a good a sequel to *Kaliṅkattup Paraṇi*. The poet Cayaṅkoṇṭār has succeeded to a great extent in rendering it with an easy flow with beautiful touch of rhythmic meter.

The hero and his commander-in-chief

The hero of *Kaliṅkattup Paraṇi* is the I Kulōttuṅkaṉ, one of the most famous kings of the cōḻa dynasty. He ruled the cōḻa Kingdom for fifty years (1070 A.D. and 1120 A.D). It was during his time that a delegation had gone to China and he had links with other Asian countries like Cambodia and Katāram. Kulōttuṅkaṉ I had the distinction of regularizing the land tax of the entire cōḻa kingdom after he had arranged to measure the land areas and he had also abolished the customs duty in the interest of the public. He was an erudite scholar and he had fluency in a number of languages. He was proficient in music too. In his time, he had chosen 50 able and efficient persons from among the chieftains, generals and ministers, made them chief administrators and thereby he could rule his land efficiently.

One of his best-known lieutenants was Karuṇākarat Toṇḍaimāṉ. He was a commander-in-chief of a rare caliber. Toṇḍaimāṉ was a special title conferred on him.

When the king of North Kaliṅkam Aṇandavaṉmaṉ did not care to pay his tribute twice, the I kulōttuṅkaṉ wanted to suppress his audacity. He expressed his desire to the commander-in-chief **Karuṇākarat Toṇḍaimāṉ**. When Toṇḍaimāṉ recognized the king's innate desire, he obtained his permission and took upon himself the leadership to lead the battle. He waged the war against kaliṅkam and crushed the enemies. In indication of his resounding victory, he brought home large elephants, heaps of rubies and various other treasures and placed them before his great king as humble token of his service. This wonderful piece of war poetry in Tamil is the narration of the resounding victory of North Kaliṅkam. True to the tradition of *Paraṇi* poetry in Tamil, this poetic composition by Cayaṅkoṇṭār bears the title *Kaliṅkattup Paraṇi*, the name of the defeated land.

The Format of the Book and Its Significant
There are 13 parts in *kaliṅkattup paraṇi* and the parts are:

1. **Invocation** (Kaṭavuḷ Vāḻttu)
2. **Open The Doors** (Kaṭai Tiṟappu)
3. **In praise of the forest where kāḷi dwells** (Kāṭu Pāṭiyatu)
4. **In praise of the kāḷi temple** (Kōyil Pāṭiyatu)
5. **In praise of kāḷi** (Tēviyaip Pāṭiyatu)
6. **In praise of the attendant spirits of kāḷi** (Pēykaḷaip Pāṭiyatu)
7. **Jugglery** (Intiracālam)
8. **Lineage of the cōḻa kings in which Kulōttuṅkaṉ was born** (Rājapāram Pariyam)
9. **Goblins appeal to gracious consort, representing their intense hunger** (Pēy Muṟaoppāṭu)
10. **Incarnation of Kulōttuṅkaṉ** (Avatāram)
11. **Goblin narrates to kāḷi** (Kāḷikkuk Kūḷi kūṟiyatu)
12. **Description of battle seenes** (Pōr Pāṭiyatu)
13. **Of the heroic deeds in the battle – field** (Kaḷam Pāṭiyatu)

1. Invocation (Kaṭavuḷ Vāḻttu)

This invocation has the plea to civaṉ (God siva), Tirumāl (God Vishnu), Nān Mukaṉ (God Brahma), Ñāyiru (The Sun God), Yāṉai Mukaṉ (Lord Ganesha), Aṟmukaṉ (God Murukaṉ), Nāmakal (Goddess Saraswati), Umā (Goddess Pārvati) that hero of this poem, the king I Kulōttuṅkaṉ, would live long. This first section contains '20' verses and these songs equate the king to those gods and Goddess. The poet also hails the canopy of the king and says it should prosper with crops that would bring about plenty. The poet farther greets the cōḻa dynasty and their flag with tiger emblem in this invocation.

2. Open The Doors (Kaṭai Tiṟappu)

This second section is the request to the womenfolk to keep the house door open to receive their husbands, as they would come celebrating the victory of the war. It is more appropriate to say that the womenfolk in the domain of king Kulōttuṅkaṉ are requesting each other to keep their doors open rather than to say that the poet Cayaṅkoṇtār is asking the womenfolk to keep their doors open.

There are 54 verses in this section. All the poems are the most beautiful creations of the poets. They are coupled with rhythmic beauty and imaginative creativity. The poet Cayaṅkoṇtār brings out a romantic scenario depicting women's grace and beauty in an effective way. The verses 23, 34, 47, and 63 may be cited as examples.

For some time they keep the door open looking out for their husbands and then shut the door in disappointment. In this process the hinges of the door get worn out. (69)

Particularly in this section, we cannot but appreciate the subtle sense of suggestion of the poet. The brevity of expression and the ingenuity of thought of cayaṅkoṇtār attract the attention of the readers.

3. In praise of the forest where Kāḷi dwells (Kāṭu Pāṭiyatu)

Here *Kāṭu* denotes a land as dry as ever. The leaves of *Kārai* plants are scorched, the *Cūrai* plants have their leaves turned black, the trees have the barks come off and the trunks of the desert trees are even broken.

This section contains '22' verses – all of them are the poetic and pictorial representations of barren waste land (pālai) and its extreme heat. The verse '80' may be cited as an example. It says that from out of the barren waste land the

eagles fly off while their shadows are seen fleeting across. Besides this shadows one cannot see any other shadow.

4. In praise of the Kāḷi temple (Kōyil Pāṭiyatu)

The temple here refers to the temple of the goddess of war namely *Koṟṟavai* also known as Kāḷi. To build this temple cōḻa kings used the rubies that the queens of the defeated kings wore as the foundation stones. The bricks were made up of the skulls of the dead warriers. The blood of dead warriers was used as water; their fat was used as mortar.

The Kaṉaya tree trunks of the defeated kingdom were used for the pillars and ceiling planks of the temple. The domes of the temple was framed by the bones of the defeated. Their flags were used for roofing. The poet Cayaṅkoṇtār uses his imaginative skill to depict the temples' structure starting from the entrance to the temple up to the Sanctum - Sanctoriyum where Kāḷi is seated. The domes of the temple are guarded by ghosts he says.

The one who reads this section will be filled with awe and fear. Verses 112 and 118 may be cited as examples for above fact. This section contains 24 verses.

5. In praise of Kāḷi (Tēviyaip Pāṭiyatu)

Here Tēvi denotes Kāḷi. The description of Kāḷi's anklet, the mark on her forehead, her dresses, her breasts, her belly, her upper garment, hands, lips, face, earrings, garland and such. In this section there are 13 verses. The poet says that Kāḷi is the one who bore Nāṉ Mukaṉ, Tirumāl, Yāṉai Mukaṉ and Aṟmukaṉ.

6. In praise of the attendant spirits of Kāḷi (Pēykaḷaip Pāṭiyatu)

This section contains 19 verses. It talks humorously about the attendant spirits of Kāḷitēvi. Their hands, legs, belly, elbow, body, cheeks, eyes, ears, teeth, head and such. The teeth is compared to that of plough with a pick axe and the head that is sturdy to hit and break the sky (41). There are ghosts, some lame and some deaf and some dumb – they prepare porridge in the battlefield and gulp it hot in exultation and so burn their tongues.

7. Jugglery (Intiracālam)

While Kāḷitēvi is seated on the couch with pillows on either side, two ghosts keep fanning her. At that time, one tall ghost arrives to inform Kāḷitēvi that one old ghost once driven away had come all the way from Himalayas to perform the Jugglery it learnt when it was away. With the permission of Kāḷitēvi, this 'Mutupēy' performs Jugglery. This section contains 25 verses noted for their sense of humor.

8. Lineage of the Cōḻa kings in which Kulōttuṅkaṉ was born (Rājapāram pariyam)

There are 34 verses in this section. This 'Mutupēy' tells Kāḷitēvi how Karikālaṉ went as far as the Himalayas and conquered it erecting the flag with tiger symbol. Moreover this Karikālaṉ had imprinted the kingly heritage of Kulōttuṅkaṉ – that Tirumāl himself will incarnate to be king Kulōttuṅkaṉ of the cōḻa dynasty.

In this section, the heroe Kulōttuṅkaṉ's birth (206) and his victory (207) are celebrated.

9. Goblins appeal to Gracious consort, representing their intense hunger (Pēy Muṟayaippāṭu)

The attendant spirits surrounding Kāḷitēvi plead with her to relieve them of their hunger. At that time Kāḷitēvi predicts that there will be war in kaliṅkam and as a result of the war, their hunger will be quenched. To this, the ghosts jump about with ecstasy.

This section is noted for its humor and it contains 20 verses.

10. Incarnation of Kulōttuṅkaṉ (Avatāram)

This section contains 80 verses. The poet cayaṅkoṇṭār says that while the land of cōḻa was immersed in darkness, I Kulōttuṅkaṉ emerged like the sun (261). Here in this section, the poet talks about the glory of Kulōttuṅkaṉ's rule as told by Kāḷidēvi to the attendant spirits.

While Kāḷitēvi was having her session, the ghost from kaliṅka brings news that war is surmounting there. To this, the other ghosts abandon themselves to dancing.

குலோத்துங்கன் நடை பயின்றது

240. சினப் புலி வளர்ப்பதோர்
சிறுப் புலியும் ஒத்தே,
திசைக் களி(று) அணைப்பதொர்
தனிக் களிறும் ஒத்தே
அனைத்(து) அறமும் ஒக்க அடி
வைக்க அடி வைத்தே,
அறத்தொடு மறத் துறை
நடக்க நடை கற்றே

Kulōttuṅkaṉ tries to walk

The child grew up like the cub
Of a fierce tiger,
Like the cub of the huge elephants
Guarding the directions,
As he stood up to take a step
All dharmic acts fkourished
Heroic exploits not lagging far behind.

மழலை மொழிந்தது

241. தாயர் தருபால் முலைசுரக்க வரு நாளே
தானும் உலகத்தவர் தமக்(கு) அருள் சுரந்தே,
தூய மனுவும், சுருதியும் பொருள் விளங்கிச்
சொற்கள் தெரியத் தனது சொற்கள் தெரிவித்தே.

Child's prattle

Even when he was drinking mother's milk
He learnt to show his grace to his subjects!
Even while learning to talk,
He explined words from Vedas and Manu Smruti
In a prattling manner.

பூணூல் அணிந்தது

242. திருமார்பின் மலர் மடந்தை திருக்கழுத்தின்
மங்கல நாண் என்ன, முந்நூல்
பெருமார்பில் வந்(து) ஒளிரப் பிறப்(பு) இரண்டா
வது பிறந்து சிறந்த பின்னர்.

Wears the sacred thread

Lakshmi dwells in the chest of **Viṣṇu**
Kulōttuṅkaṉ was adorned with the sacred thread, *pūṇūl*,[1]
Like the maṅkala cūtra[2] of **Lakshmi**
With this ceremony
He had became twice-born

1. *pūṇū*l: The sacred thread signigies that a caste Hindu is twice born

மறை பயின்றமை

243. போதம் கொள் மாண் உருவாய்ப் புவி இறந்த
அஞ்ஞான்று புகன்று சென்ற
வேதங்கள் நான்கினையும் வேதியர்பால்
கேட்(டு) அருளி மீண்டு கற்றே.

Learnt the Vedas

In the garb of a learned bramachari
Viṣṇu in his dwarf **Avnatār**
Begged this earth from Māvali,
Also he had taught the four Vedas then
Kulōttuṅkaṉ once again learnt
The four Vedas four the brahmin teachers!

உடைவாள் ஏந்தல்

244. 'நிறை வாழ்வைப் பெறல் நமக்கு அணித்(து)' என்று
நிலப்பாவை களிப்ப, விந்தத்(து)
உறைவாளைப் புயத்(து) இருத்தி, உடைவாளைத்
திரு அரையில் ஒளிர வைத்தே

Training in sword-fighting

Goddess earth rejoiced at the midnight
Of regaining full and rich life
Under the regime of Kulōttuṅkaṉ
Goddess of Heroism resident at Vindhyās
Now dwells in his arms!
The royal sword adorned
His girdle!

யானையேற்றம்

245. ‘ஈர்இரு மருப்(பு) உடைய வாரணம் உகைத்தே
இந்திரன் எதிர்ந்தவரை வென்று வருமே; யான்
ஓர் இரு மருப்(பு) உடைய வாரணம் உகைத்தே
ஒன்னலரை வெல்வன்’ என அன்னது பயின்றே.

Indra rides on his four-horned elephant
And overwhelms his enemies!
‘Riding on a two-horned elephant
I will overcome my foes’
So saying, Kulōttuṅkaṉ
Was trained in elephant-riding.

குதிரையேற்றம்

246. ‘இற்றை வரையும் செல(வு) அருக்கன் ஒருநாள் போல்
ஏழ் பரி உகைத்(து) இருள் அகற்றி வருமே; யான்
ஒற்றை வயமான் நடவி இத்தரை வளாகத்(து)
உற்ற இருள் தீர்ப்பன்; என மற்(று) அது பயின்றே

Horse riding

Drawn by seven horses
This Sun moves about
Dispelling the darkness around earth
'I would ride on a single victorious horse
And relieving this earth
From the darkness of evil',
Thus saying, he learnt horse-riding

படைக்கலப் பயிற்சி

247. சக்கரம் முதல் படை ஓர் ஐந்தும் முதல் நாளே
தன்னுடைய ஆன; அதனால், அவை நமக்குத்
திக்கு விசயத்தின் வரும் என(று) அவை பயிற்றிச்
செங்கைமலர் நொக்கில, கழந்தில தனக்கே.

Other arms training
The weapons of chakra and others
Belong to heroic Kulōttuṅkaṉ
They will be useful in future expeditions
He attained mastery without effort
Nor straining his hands
Nor reddening his palms!

கலைப் பயிற்சி

248. உரைசெய் பல கல்விகளின் உரிமை பல
சொல்லுவ(து) ஏன்? ஊவமை உரை செய்யின், உலகத்(து)
'அரசர் உளர்அல்லர்' எனஅவை புகழ
மல்கு கலை அவை அவைகள் வல்ல பிறகே

Learnt all arts

He was well versed in all branches of knowledge!
He has no equal, among kings,
The audience extolled his proficiency
Thus he learnt all arts
And attained unparalled skill!

இளவரசர் ஆனமை

249. இசையுடன் எடுத்த கொடி அபயன் அவ
னிக்(கு) இவனை இளவரசில் வைத்த பிறகே,
திசை அரசருக்(கு) உரிய திருவினை
முகப்ப(து) ஒரு திருவுளம் அடுத்(து) அருளியே.

Crown prince

Vīrarācēnticra cōlāṉ his maternal uncle
Declared him as the crown prince!
Thereafter he decided to go on
Expeditions, to seize the wealth of other kings!

போர்மேல் சென்றது

250. வளர்வதொர் பதத்தினிடை மதகரி
முகத்தினிடை வளை உகிர் மருத்து விளையா(டு)
இளஅரி எனப், பகைஞர் எதிர்முனைக
ளைக் கிழிய எறிபடை பிடித்(து) அருளியே.

Just as the growing cub of a lion
Inscribing its nail marks,
On the face of a lion play fully
Kulōttuṅkaṉ took weapons
To destroy enemies' camps'!

வட அரசரை வெல்லல்

251. குடதிசை புக்கடவு குரகதர

தத்(து) இரவி குறுகலும் எறிக்கு இருள்போல்,

வடதிசை முகத்(து) அரசர் வருகதம்உ

கத் தனது குரகதம் உகைத்(து) அருளியே.

Conquest of Northern kings

Just as the Sun's chariot
Drawn by seven horses
Dispels darkness from East to West
Kulōttuṅkaṉ deployed his cavalry
And destroyed his enemies' heroism
From South to North!

வயிராகரத்தை எரித்தது

252. புரம் எரி மடுத்தபொழுது அது இது

எனத், திமிரி புகை எரிகுவிப்ப, வயிரா

கரம் எரி மடுத்(து) அரசர் கரம் எதிர்

குவிப்ப(து) ஒரு கடவுரைதனைக் கடவியே.

Burning down the town of Vayirākaram

Riding on a mountain - like elephant
Kulōttūṅkaṉ burnt down the city of **Vayirākaram**
The conflagration resembling the fierce fire
By which **civaṉ** destroyed the three of domons!
Making his enemies show reverence
With folded hands!

களங் கொண்டது

253. குளம் உதிர மெத்தியதொர் குரைகடல்
கடுப்ப, எதிர் குறுகலர்கள் விட்ட குதிரைத்
தளம் உதிர வெட்டி ஒரு செரு முதிர
ஒட்டினர்கள் தலைமலை குவித்(து) அருளியே

Victory in the battle-field

Just as sea on its waxing tide
Erases a pool,
The advancing column Kulōttūṅkaṉ destroyed
The cavalry of his enemies
And severed the heads of his enemies
And piled them like a mountain!

சக்கரக்கோட்டம் அழித்தது

254. மனுக்கோட்டம் அழித்தபிரான்
வளவர்பிரான் திருப்புருவத்
தனுக்கோட்ட, நமன்கோட்டம்
பட்டது சக்கரக் கோட்டம்

Destruction of Callaral Kōṭṭam

Kulōttūṅkaṉ destroyed the evil
In mankind
He bent the bow of his eye-brows
Cakrakōṭṭam was destroyed completely
And his enemies dispatched
To the world of death!

தோற்றோர் திறைப் பொருள்

255. சரி களந்தொறும் தங்கள் சயமகள்
தன்னை மன்அபயன் கைப்பிடித்தலும்,

பரிகளும், களிறும், தன ராசியும்
பாரி போகம் கொடுத்தனர் பார்த்திபர்.

Tributes paid by defeated kings

In battles that raged
His enemies fell back!
Kulōttuṅkaṉ married
The Goddess of victory everwhere!
Defeated kings presented
Horses, elephants, heaps of gold
To the victor, the Cōlā king.

பகைவர் புறமுதுகிடல்

256. பொரு தராதிபர் கண்கள் சிவந்தில
போரில் ஓடிய கால்கள் சிவந்தன!
விருதராசபயங்கரன் செங்கையில்
வேல் சிவந்தது! கீர்த்தி வெளுத்ததே!

While warring with Kulōttuṅkaṉ
The eyes of the enemy-king's did not redden (in rage and valour)
Instead their feet reddened
As they were running for their lives!
Kulōttuṅkaṉ , known as Virutarāca Payaṅkaraṉ
Held his spear, which reddened!
His fame acquired the white colour!

வீரராசேந்திரன் இறந்தமை

257. மாது உகைத்து ஒருதனி அபயன்; இப்படி
வடதிசை மேற்செல, மன்னர் மன்னவன்

தேவருக்கு அரசனாய் விண்ணின் மேற்செலத்
தென்திசைக்குப் புகும் தன்மை சொல்லுவாம

Death of vīrarācēntiran

On horse back, Kulōttūṅkan went north
The king of kings, vira rācēntiran
Breathed his lost and attained heaven
Afterwards, what happended in Cōlā Nāṭu
We narrate here:

சோழ நாட்டின் நிலை

258. மறையவர் வேள்வி குன்றி
மனு நெறி அனைத்தும் மாறித்,
துறைகள் ஓர் ஆறும் மாறிச்,
சுருதியும் முழக்கம் ஓய்ந்தே,

The plight of Cōlā country

Performance of yagñās declined,
The code of Manu violated
Even the conduct of Brahmins deteriorated
The chanting of Vedas diminished

259. சாதிகள் ஒன்றோ(டு) ஒன்று
தலைதடு மாறி, யாரும்
ஓதிய நெறியின் நில்லா(து)
ஒழுக்கமும் மறந்து போயே,

The same

Confusion prevailed in the castes
Everyone faltered in conduct
Violated the prescribed norms
And discipline and moral demeanour disappeared.

260. ஒருவரை ஒருவர் கைம்மிக்(கு)
உம்பர்தம் கோயில் சோம்பி,
அரிவையர் கற்பின் மாறி,
அரண்களும் அழிய ஆங்கே.

The same

Every one wanted overrule others
Temples wore a desolate look
Women wavered in their chaste conduct
All moral restrictions were disregarded

குலோத்துங்கன் சோழநாடு புகுந்தது

261. கலி இருள் பரந்தகாலைக்
கலி இருள் கரக்கத் தோன்றும்
ஒலிகடல் அருக்கன் என்ன
உல(கு) உய்ய வந்து தோன்றி

Kulōttuṅkaṉ returened Cōlā Nāṭu

When darkness of evil
Enguled Cōlā country,
Kulōttuṅkaṉ returned home from the North
To dispel the darkness of suffering
As the Sun rises in the sea

குலோத்துங்கன் நிலை பெறுத்தியது

262. காப்(பு) எலாம் உடைய தானே
படைப்பதும் கடனாக் கொண்டு
கோப்(பு) எலாம் குலைந்தோர் தம்மைக்
குறியிலே நிறுத்தி வைத்தே.

Kulōttuṅkaṉ stabilises situation

Duty to protect the citizens
Fell on Kulōttuṅkaṉ
Creation is also his prerogative,
He restored law and order
From anarchy, and guided them on a right path

மங்கல நீராடியது

263. விரி புனல் வேலை நான்கும்
வேதங்கள் நான்கும் ஆர்ப்பத்,
திரி புவனங்கள் வாழ்த்தத்
திரு அபிடேகம் செய்தே.

Kulōttuṅkaṉ takes holy bath

All the four seas hailed him
All the four Vedas blessed him
The three worlds praised him
He was bathed in holy water
A cerenomy prior to coronation

முடி புனைதல்

264. அறை கழல் அரசர் அப்பொழு(து)
அடியிசை அறு(கு) எடுத்(து) இட,
மறையவர் முடி எடுத்தனர்
மனு நெறி தலை எடுக்கவே.

Kulōttuṅkaṉ crowned

At that time kings took up
Aṟuku grass and blessed him

Placing it at his feet!
The **Brahmins crowned him**
So that Manu's code may flourish!

அறம் தழைத்தது

265. நிரைமணி பல குயிற்றிய
நெடுமுடி மிசை விதிப்படி
சொரி புனலிடை முளைத்தன
துறைகளின் அறம் அனைத்துமே

The gems are studded
In rows in his crown
When elders poured water
Blessing him,
Seeds of **Dharma** sprouted!

புலிக்கொடி பறந்தது

266. பொது அற உலகு கைக்கொடு
புலி வளர் கொடி எடுத்தலும்
அது முதல் கொடி எடுத்தன
அமரர்தம் விழ(வு) எடுக்கவே.

Tiger flag flutters

Kulōttuṅkaṉ took up the tiger flag,
Symbolizing that the whole
World belonged to him
And none else!
From that day onwards
Flag hoisting festivals
Were conducted in Temples!

267. குவி கை கொடு அரசர் சுற்றிய
குரைகழல் அபயன் முத்(து) அணி
கவிகையின் நில(வு) எறித்தது!
கலி எனும் இருள் ஒளித்ததே!

The same

Kulōttuṅkaṉ wore heroic anklets;
With folded hands!
Kings went round him worshipping!
His white parasol adorned
With garlands of gems
Shines like the moon!
The darkness of the sufferings of citizens disappears!

268. அரன் உறையும்படி மலைமகள்
அடைய விளங்கின அனையோன்
ஒரு தனி வெண்குடை உலகில்
ஒளி கொள் நலம்தருநிழலில்!

Under the peerless protection
Of his white parasol
With its dazzling luster,
All the mountains of this world
Reflecting the light of his glory
Looked like the abode
Of Lord Civaṉ, Mēru mountain!

குடைச் சிறப்பு

269. அரி துயிலும்படி கடல்கள்
அடைய விளங்கின கவினின்

ஒரு கரி வெம்கலி கழுவி
உலவு வெரும் புகழ் நிலவில்!

The protective parasol

Dispelling darkness of sufferings of the people,
The fame Kulōttuṅkaṉ shined brightly
Converting all oceans into pāṟkaṭal
Sea of milk, where **Viṣṇu** slept
At the same time, knowing everything

வெற்றிச் சிறப்பு

270. நிழல் அடைந்தன திசைகள்!
நெறியில் அடைந்தன மறைகள்!
கழலில் அடைந்தனர் உதியர்!
கடலில் அடைந்தனர் செழியர்!

Glorious victory

He reigned supreme in all directions
The path of Vedas was restored!,
Cēras surrendered at the feet of Cōlān
Pāṇṭiyas went underground
Beyond the seas
In small islands!

கொடியும் வேள்வியும்

271. கருணையொடும் தன(து) உபய
கரம் உதவும் பொருள் மழையின்
அரணிய மந்திர அனல்கள்
அவை உதவும் பெருமழையே.

Munificence and yagñas

Kulōttuṅkaṉ rained gifts
To supplicants with both hands!
Sacred fire kindled
For conducting yagñas!
Brought a flow of rains
To bring prosperity!

அரசாளும் சுமை

272. பரிசில் சுமந்தன கவிகள்!
பகடு சுமந்தன திறைகள்!
அரசு சுமந்தன இறைகள்!
அவனி சுமந்தன புயமும்!

The burden of the king

Poets were loaded with presents,
The Bulls with tributes of kings
Kings fell at his feet;
His arms were able ato withstand
The burden of ruling the world!
This would rested on his shoulders!

நேரிய அரசாட்சி

273. விரித்த வாள் உகிர் விழித் தழல் புலியை
மீது வைக்க இமயத்தினைத்
திரித்த கோலில் வளை(வு) உண்டு; நீதிபுரி
செய்ய கோலில்வளை(வு) இல்லையே

Righteous rule

In order to incribe the royal sign
Tiger, with sharp nails and fire emitting eyes
Karikālaṉ stuck **Himālayās**

With his *centu*,
A curved instrument,
So that it has bent!
But in his righteous scepter
Dispensing justice,
There is no bend!

தளைகள் இல்லை

274. கதங்களில் பொருது இறைஞ்சிடா அரசர்
கால்களில் தளையும், நூல்களின்
பதங்களில் தளையும் அன்றி, வே(று) ஒரு
பதங்களில் தளைகள் இல்லையே!

No fetters

Enraged kings, who did not surrender
Had to be chained
In verses, there is a chain of sequence in feet
None else had any chains!

குலோத்துங்கன் பொழுது போக்கு

275. மென்கலாப மடவார்கள் சீறடி
மிசைச் சிலம்(பு) ஒலி விளைப்ப(து)ஓர்
இன் கலாம் விளைவ(து) அன்றி, எங்குமோர்
இகல் கலாம் விளைவ(து) இல்லையே!

Pastime for Kulōttuṅkaṉ

In softness and style,
Damsels resembling peacocks,
While walking, their anklets
Cause a jingling sound;
There is no other conflicting noise!

276. வருசெரு ஒன்(று) இன்மையினால், மற்போரும்
சொற்புலவோர் வாதப் போரும்,
இருசிறை வாரணப் போரும், இகல் மதவா–
ரணப் போரும் இனைய கண்டே.

The same

As there was no fighting
The king witnessed
The fight between debating pandits
The fight between wrestlers
And the fight between cocks!
And elephants'

277. கலையினொடும், கலைவாணர் கவியினொடும்,
இசையினொடும், காதல் மாதர்
முலையினொடும், மனுநீதி முறையினொடும்,
மறையினொடும் பொழுது போக்கி

The same

By deriving pleasure from arts,
By enjoying the poetic expressions and other arts,
By hearing enchanting music,
By playing with the breasts of beloved damsels,
By dispensing; justice according to Manu's code,
By hearing Vedic chants,
The king passed his time!

வேட்டைக்குப் புறப்படல்

278. காலல் தண்டலை உழக்கும் காவிரியின்
கரைமருங்கில் வேட்டை ஆடிப்,

பாலாற்றங் கரை மருங்கு பரிவேட்டை
ஆடுதற்குப் பயணம் என்றே.

Kulōttuṅkaṉ goes hunting

Once on the banks of Kāviri
Kulōttuṅkaṉ went on hunting
Suddenly he turned round
And said Let us go hunting
On the banks of the Pālaṟu river

படை திரண்டது

279. முர(சு) அறைக! என்(று) அருளுதலும், முழுதுலகும்
ஒரு நகருள் புகுந்த(து) ஒப்பத்,
திரைசெய் கடல் ஒலி அடங்கத் திசைநான்கின்
படை நான்கும் திரண்ட ஆங்கே.

'Announce our journey by
The beating of drums, he ordered
Over coming, the noise of the sea
Four-fold[1] army poured forth into the city
As if the entire world has been mobilised!

1. Four fold army-elephants, horse, chariot, foot-soldier divisions.

நன்முழுத்தத்தில் புறப்பாடு

280. அழகின்மேல் அழகுபெற அணி அனைத்தும்
அணிந்(து) அருளிக், கணித நூலில்
பழகினார் தெரிந்(து) உரைத்த பழு(து) அறு நாள்
பழு(து) அற்ற பொழுதத்(து) ஆங்கே.

Auspicious time for departure

He adorned himself with fitting ornaments
Enchancing the handsome features of Kulōttuṅkan̲
At the appointed hour of good omens
Fixed by expert astrologers
Without any blemishes
He commenced his journey.

கொடை அளித்தல்

281. அனக தானம் மறைவாணர் பலர் நின்று பெறவே,
அபய தானம் அபயம் புகுத மன்னர் பெறவே,
கனக தானம் முறை நின்று கவிவாணர் பெறவே,
கரட தானம் மதவாரணமும் அன்று பெறவே

Gift distributed

At that auspicious hour,
The Brahmins received faultless gifts
The kings received the gift of graceful protection
The poets received gold in the order of merit,
The elephants got excited and got its chor as gift!

யானைமேல் ஏறுதல்

282. மற்ற வெங்கட களிற்றின் உதயக்கிரியின் மேல்
மதி கவித்திட உதித்திடும் அருக்கன் எனவே.
கொற்ற வெண்குடை கவிப்ப மிசைகொண்டு கவரிக்
குலம் மதிப்புடை கவித்த நில(வு) ஒத்து வரவே.

Mounting the elephants

The Sun, holding Moon as a parosal
Rises on the Utayakiri
So too, did, Kulōttuṅkan̲

With parasol on his fiece elephant with flowing chor
The white ornamental fans on both sides
Shine like the rays of the moon!

பல்லிய முழக்கம்

283. ஒரு வலம்புரி தழங்(கு)ஒலி முழங்கி எழவே.
உடன் முழங்கு பணிலம் பல முழங்கி எழவே,
பருவம் வந்து பல கொண்டல்கள் முழங்கி எழவே,
பலவிதங்களொடு பல்லியம் முழங்கி எழவே.

The sound of various instruments

The valampuri conch raised its auspicious voice
Various other conches joined this chorus
Man soon clouds sounded like drums
Various other instruments joined this chorus!

முழங்கும் ஓசைகள்

284. மன்னர் சீர், சயம் மிகுத்து இடைவிடாத ஒலியும்,
மறைவலாளர் மறை நாள்வயின் வழாத ஒலியும்,
இன்ன மாகடல் முழங்கி எழுகின்ற ஒலி என்(று)
இம்பர் உம்பர் அறியாத பரி(சு) எங்கும் மிகவே.

Resounding noises

Kings singing the praise of Kulōttuṅkan raised their voice;
Daily chanting of Vedas by Brahmins raised faultless voice;
These voices resembled the voice of the seas
Men and angles wondered at these bewildering voices!

ஏழிசை வல்லபி உடன்வரல்

285. வாழி சோழ குலசேகரம்! வகுத்த இசையின்
மதுர வாரி எனல் ஆகும் இசைமா(து) அரி(து) என
எழுபார் உலகொடு ஏழ்இசை வளர்க்க உரியாள்
யானைமீது பிரியாது உடனிருந்து வரவே

Ēlicaivallapi also follows

'Hail the crown of the Cōlā line'
She was capable of singing like a sea of sweetness
In the tunes set by the Cōḻaṉ;
Ēḻicaivallapi, the loved concubine of Kulōttuṅkaṉ
Expert at seven-fold music
Developing the art in seven islands[1],
Thought it a hardship to be separated even for a while
And was seated on the back of the elephant
Along with him!

தியாகவல்லியும் உடன்செல்லல்

286. பொன்னின் மாலை மலர் மாலை பணிமாறி உடனே
புவனி காவலர்கள் தேவியர்கள் சூழ்பிடி வரச்
சென்னி ஆணையுடன் ஆணையை நடத்தும் உரிமைத்
தியாகவல்லி நிறைசெல்வி உடன் மல்கி வரவே.

Wives of kings followed queen, Tiyākavalli,
Presenting her golden and flower garlands
Along with Kulōttuṅkaṉ the crowned queen
Also held sway by her commands!
She was riding on a she-elephant
By the side of Kulōttuṅkaṉ!

மகளிரும் மன்னரும் சூழ வருதல்

287. பிடியின்மேல் வரு பிடிக்குலம் அநேகம் எனவே,
பெய் வளைக்கை மடமாதர் பிடிமீதின் வரவே;
முடியின் மேல் முடி நிரைத்து வருகின்ற(து) எனவே,
முறைசெய் மன்னவர்கள் பொற்குடை கவித்து வரவே.

Kings and damsels follow

Surrounded by princesses and kings
Kulōttuṅkaṉ proceeded further;
Young women with beautiful bangles
Looked like she-elephants!
Riding on she-elephants
Kings followed with their golden parasols
Shining like a crown upon a crown!

வீரர் பின்தொடர்தல்

288. யானைமீது வரும் யானையும் அநேகம் எனவே,
அடுக ளிற்றின் மிசைகொண்(டு) அர(சு) அநேகம் வரவே;
சேனைமீதும் சேனை வருகின்ற(து) எனவே,
தெளி படைக்கலன் நிலாவொளி படைத்து வரவே.

Soldiers follow

On battle-trained he-elephants, kings followed
Like he-elephants on he-elephants!
The dazzling weapons held by soldiers
Looked like an army marching upon a army!

முரசொலியும் கொடி நிரலும்

289. முகிலின்மேல் முகில் முழங்கி வருகின்ற(து) அதிர்ந்து வரவே;
மூரி யானைகளின் மேல் முர(சு) அதிர்ந்து வரவே;

துகிலின்மேல் வரு துகிற்குலமும் ஒக்கும் எனவே,
தோகை நீள் கொடிகள்மேல் முகில் தொடங்கி வரவே.

Drums beat and flags flutter

The beat of drums on elephants
Resembled the thunder of clouds upon clouds
The fluttering flags were followed by clouds
Resembling one set of clouds following another!

சேனைகளின் செலவு

290. தேரின்மீது வரு தேர்களும் அநேகம் எனவே,
செம்பொன் மேகலை நிதம்புநிரை தேரின் வரவே;
'பாரின்மீதும் ஒரு பார் உளது போலும்' எனவே,
படல தூளியும் எழுந்(து) இடையின் மூடி வரவே.

Marching of the army

Damsels, with their waists
Adorned with golden girdles,
Come riding on chariots,
Resembling chariots upon chariots!
The cloud of dust raised
Looked like one world upon another!

மற்றொரு சேது பந்தனம்

291. யானைமேல், இளம்பிடியின்மேல் நிரைத்(து)
இடையறாது போம் எறி கடற்(கு) இணை
சேனை மாகடற்(கு) அபயன் இம்முறைச்
சேதுபந்தனம் செய்த(து) ஒக்கவே.

Another cause way of Cētu

The innumerable he-elephants
Closely followed by she-elephants
Marching forward without a gap
Looked as large as the seas!
It seemed that Kulōttuṅkan in this Avantār also
Wanted to build a cause-way for Ilaṅkai!

கங்கையும் யமுனையும்

292. நீல மாமணிச் சிவிகை வெள்ளமும்,
நித்திலக் குலக் கவிகை வெள்ளமும்,
காலினால் வரும் யமுனை வெள்ளமும்,
கங்கை வெள்ளமும் காணமின்! என்னவே.

Ganges and Yamuna

Sapphire-studded palanquins
Presented a spectacle
Like the floods of
Dark flowing Yamunai!
Gems inlaid parasols
Looked like the great **Ganga**
Overflowing in its white splendour!

புலிக்கொடி உயரப்பறத்தல்

293. கொண்டை, மகணம், உவணம், வாரணம்,
கேழல், ஆளி, மாமேழி, கோழி, வில்
கொண்ட ஆயிரம் கொடி நுடங்கவே
குழுறு வெம்புலிக் கொடி இலங்கவே.

Tiger flag flutters higher

Flags with figures of
Keṇṭai fish, snake, lion, plough, hen,
Eagle and elephant
Fluttered in their thousands!
The flags with roaring tiger!
Soared higher than all flags!

இணையிலா மகளிர்

294. தொடைகள், கந்தரம், புடைகொள் கொங்கை, கண்,
சோதி வாள்முகம், கோதை ஓதி, மென்
நடைகள் மென்சொல் என்(று) அடைய ஒப்பிலா
நகைமணிக் கொடித் தொகை பரக்கவே,

Peerless damsels

Damsels gathered to witness the procession
In shapely thighs, neck,
Sprouting breasts growing in stature,
Eyes and shining faces,
Hair-style decked with flowers
Gentle styles of walking
Sweetness of words-
None can come near them-
The smiling flowery creepers galore!

295. எங்கும்உள மென்கதலி; எங்கும் உள
தண்கமுகம் எங்கும்உள பொங்கும் இளநீர்;
எங்கும்உள பைங்குமிழ்கள்; எங்கும்உள
செங்குமுதம்; எங்கும்உள செங்கயல்களே!

Shapely parts

Everywhere *katali* plaintain like thighs!
Lovely necks resembling kamuku[1]
Resembling heaving breasts!
Kumiḷam flowers like noses
Red āmpal[2] flowers like lips
Kayal[3] fish like eyes!

1Kamuku-Areca palm, 2. Ceṅkumutam-Red Indian water lily
3.Kayal-Carp fish

296. ஆ(று)அலை தரங்கம்உள் அன்னம் நடை
தாமும்உள்; ஆலைகமழ் பாகும் உள ஆய்
வேறும் ஒரு பொன்னி வளநாடு சய-
துங்கன்முன் விதித்ததுவும் ஒக்கும் எனவே.

The same

Waves of the flowing river
Look like tge folding lines of the stomach of damsels
In gait, swan-like,
Words sweet like the sugarcane juice
It looked as if Kulōttuṅkaṉ has created
Another Cōlā country with all its scenes!

யானை வரிசை

297. வேழம்நிரை என்றமலை யெங்கும் மிடை-
கின்ற அயில்வென்றி அபயன்தன் அருளால்
வாழ அபயம் புகுது சேரனொடு
கூடமலை நா(டு) அடைய வந்த(து) எனவே.

Array of elephants

Kulōttuṅkaṉ won elephants armies everywhere!
It seems the Cēra king has come
To live under the protection of the spear of Cōlā;
And hence, all mountains have
Followed their king and
Joined the elephant entourage!

298. அக் கிரிகுலங்கள் விடும் அங்குலியின்
நுண்திவலை, அச் செழியர் அஞ்சிவிடும் அத்
திக்கில்உள நித்திலம் முகந்து கொடு
வீசி ஒரு தென்றல் வருகின்ற(து) எனவே.

Gems from the south

Elephant herds rain drops
Of water from their trunks
Shining like gems from the
Paṇṭiya country, deserted
By the king in fear of Cōlās
The south wind, it seems has
Brought the gems from there!

சிவனை வழிபடல்

299. தென்திசையில் நின்று வடதிக்கின் முகம்
வைத்(து) அருளி, முக்கண் உடை வெள்ளி மலையோன்
மன்றில் நடம்ஆடி அருள்கொண்டு, விடை
கொண்(டு), அதிகை மாநகருள் விட்டருளியே.

Kulōttuṅkaṉ worships Civaṉ

From the south, he proceeded North,
Three-eyed, Civaṉ whose abode is **Mēru** mountain
Dances in the Hall at **Citamparam**
Kulōttuṅkaṉ worshipped Natarajaṉ,
And stayed at Citamparam Town for some time

Note: Citamparam is the temple of temples in Saivaite tradition. Atikai or Tiruvatikai is one Kilo metre from Paṉruṭṭi in South Arcot District.

காஞ்சி அடைதல்

300. விட்ட அதிகைப் பதியினின்று பய–
ணம்; பயண்ம் விட்டு, விளையாடி, அப்பன்
வட்ட மதியொத்த குடை மன்னர் தொழ
நண்ணினன் வளங்கெழுவு கச்சி நகரே.

Kulōttuṅkaṉ arrives at Kāñci

Leaving the town of Atikai
Stayed at some places,
Went on hunting and sight-seeing
Moon-faced princes welcomed him
When he reached the fertile town of **Kāñci**

கலிங்கப் பேய் ஓடி வந்தது

301. என்னும் இதன் நன்மொழி எடுத்து இறைவி
சொல்லுவதன் முன்னம், இகல் கண்ட(து) ஒரு பேய்
தன்னுடைய கால் தனது பின்பட,
மனத்(து) உவகை தள்ளி வர, ஓடி வரவே.

Ghost from Kaliṅkam

Thus **Kāḷi** narrated the story
Of Kulōttuṅkaṉ in sweet words;
In the middle of her narration

One ghost which has seen the war,
Induced by pleasures of feast,
Ran helter skelter
And reached **Kāḷi.**

கலிங்கப் பேய் மொழிந்தது

302. கலிங்கர் குருதி! குருதி!
கலிங்கம் அடைய! அடைய!
மெலிந்த உடல்கள் தடிமின்!
மெலிந்த உடல்கள் தடிமின்!

The exhortations of the ghost from Kaliṅkam

Hasten to Kaliṅkam,
Hungry ghosts!
The blood of Kalinkar
Is seen every where
Fatten your bodies!
Fatten your bodies!

303. உணங்கல் வயிறு குளிர
உவந்து பருக! பருக!
கணங்கள், எழுக! எழுக!
கணங்கள் எழுக! எழுக!

The same

Let your hunger-stricken stomach
Drink the blood to the full
Soothening your stomach!
Bands of ghosts, arise!
Bands of ghosts, arise!

304. என் செயப் பாவிகாள், இங்(கு)
இருப்ப(து)? அங்(கு) இருப்ப முன்னே
வன் சிறைக் கழுகும் பாறும்
வயிறுகள் பீறிப் போன.

The same

Why do you tarry here, sinners!
Even before this
Eagles and hawks have eaten to their full
Their stomach reaching its bursting point!

305. வயிறுகள் என்னில், போதா!
வாய்களோ போதா! பண்டை
எயிறுகள் என்னில் போதா!
என்னினும், ஈண்டப் போதும்!

The same

Ours stomach will not be adequate
Mouths also inadequate,
Old teeth unequal to the task
Even then, let us hasten!

306. சிரம்மலை விழுங்கச், செந்நீர்த்
திரைகடல் பருகல் ஆகப்
பிரமனை வேண்டிப், பின்னும்
பெரும்பசி பெறவும் வேண்டும்!

The same

Severed heads look like hills;
The flood of blood flows like the seas;
To eat the heads and drinks blood
You have to ask **Piramaṉ**
A boon of intense hunger!

பேய்களின் மகிழ்ச்சி

307. என்ற ஓசை தம்செவிக்கு
இசைத்தலும், தசைப் பிணம்
தின்றபோல் பருத்துமெய்
சிரித்துமேல் விழுந்துமே.

The joy of ghosts

On hearing the sweet news,
Their forms fattened
As if they have tasted blood!
They arose in sheer ecstacy
Falling one upon another!

308. ஓகை சொன்ன பேயின் வாயை
ஓடிமுத்தம் இட்டுமே,
சாகை சொன்ன பேய்களைத்
'தகர்க்க பற்கள்!' என்னுமே!

The same

They kissed the ghost
Which brought good news!
They wanted to break the teeth
Of goblins which advocated death!

309. பிள்ளை வீழ வீழவும்,
பெருந் துணங்கை கொட்டுமே!
வள்ளை பாடி ஆடி ஓடி
'வா' எனா அழைக்குமே!

The same

Some goblins began to dance
The *tuṇaṅkaik kūttu*[1],

Dropping their children unwittingly,
Singing *vaḷḷai*[2] songs
They invited all others to join them!

1. *tuṇaṅkaik kūttu* - A dance in which arms bent at the elbows are made to strike at the sides.
2. *vaḷḷai* - A song sung while husking or hulling grains.

310. எனா உரைத்த தேவி, 'வாழி!
வாழி!' என்று வாழ்த்தியே.
கனா உரைத்த பேயினைக்
கழுத்தி னிற்கொ(டு) ஆடுமே!

The same

Goblins hailed **Kāḷi**
For narrating Cōlāṉ story!
They embraced the astrologer goblins
For predicting good news
By interpreting their dreams!

காளி போர்நிலை கேட்டல்

311. ஆடிவரு பேய்களின் அலந்தலை
தவிர்த்(து), அடுபறந்தலை அறிந்(து), அதனின்நின்(று)
ஓடிவரு பேயை, 'இகல் உள்ளபடி
சொல்க' என உரைத்தனள் உரைத்தருளவே.

Kāḷi asks for details of war

Kāḷi relieved the dancing goblins
From tiredness;
She called the goblin that saw
The battlefield and ordered it
To narrate the war as it happened'

11. காளிக்குக் கூளி கூறியது.

கலிங்கப்போர் உரைத்தற்கு அரியது

312. மா ஆயிரமும் படக் கலிங்கர்
மடிந்த களப்போர் உரைப்போர்க்கு
நா ஆயிரமும், கேட்போர்க்கு
நாள் ஆயிரமும் வேண்டுமால்.

11. KĀLIKKŪK KŪḶI KŪṞIYATU

(Gobin narrates to Kāḷi)

Battle of kaliṅkam defies description
Thousand elephants perished
More numerous kaliṅkar fell in the battle
The narrator needs thousand tongues
And the listener thousand days!

கலிங்கப் பேயின் விண்ணப்பம்

313. ஒருவர்க்(கு) ஒருவாய் கொண்(டு) உரைக்க
ஒண்ணா தேனும், உண்டாகும்
செருவைச் சிறியேன் விண்ணப்பம்
செய்யச் சிறிது கேட்(டு) அருளே!

One cannot describe with a single tongue!
As a little one lacking in wisdom
I will try to narrate it
Hear, godess, and listen

காஞ்சிமாநகரின் சிறப்பு

314. பார்எலாம் உடையான் அபயன் கொடைப்
பங்கயக் கரம் ஒப்(பு) எனப். பண்டொர்நாள்

கார்எலாம் எழுந்(து) ஏழரை நாழிகைக்
காஞ்சனம் பொழி காஞ்சி அதன்கணே.

Grandeur of Kāñci

Kulōttuṅkaṉ has conquered all the worlds!
His munificence knew no bounds!
His hand was like a lotus flower
In order to match his munificence
All the clouds in the world gathered at **Kāñci**
And rained gold for seven and a half – *Nāḻikai*[1]

1 *Nāḻikai*: A Unit of time consisting of Twenty minutes

குலோத்துங்கன் தங்கிய மாளிகைச் சிறப்பு

315. 'அம்பொன் மேரு அதுகொல்? இதுகொல்? என்(று)
ஆயிரம் கதிர் வெய்யன் ஐயுறும்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினில்
செய்த சித்திர மண்டபம் தன்னிலே.

Palace where Kulōttuṅkaṉ stayed

The golden palace of Cōḻas
Is a sky scrapper;
The sun, which goes round
The *Mēru*[1] mountain daily
Suspects whether the palace
Or the mountain is Mēru!
South-west of this palace
Was a beautiful hall of *citira maṇṭapam*[2]

1. *Mēru* - Acording to mythical cosmology, the sun is supposed to go round the Mēru mountain

2. *Cittira Maṇṭapam*- A Durbar hall with the appearance of an Art Gallery

அரச வீற்றிருத்தல்

316. மொய்த்(து) இலங்கிய தாரகை வானில்நீள்
முகட்(டு) எழுந்த முழுமதிக்(கு) ஒப்(பு) என,
நெய்த்(து) இலங்கிய நித்திலப் பந்தரின்
நின்று வெண்குடை ஒன்று நிழற்றவே.

Kulōttuṅkaṉ holds the court

The *pantal*[1] of gems, well lubricated with ghee
Rose high in the air
It looked like the star-studded heavens!
The Parosal shone like the full moon!

1. *pantal* - A structure put up for receiving guests on festive occasions.

வெண்குடையும் சாமரையும்

317. மேல் கவித்த மதிக்குடையின் புடை
வீசுகின்ற வெண்சாமரை தன் திருப்
பாற்கடல் திரை ஓர் இரண்(டு) ஆங்(கு) இரு–
பாலும் வந்து பணி செய்வ போலவே.

White parosal and ornamental fans

Kuḷōttuṅkaṉ held court in cittira maṇṭapam
The parasol was shinning like the moon!
On both sides,ceremonial fans ware swaying
Like the waves of Pāṟkaṭal[1] (in Vaikuṇṭam)

[1]Pāṟkaṭal: The legendary of milk ocean wherein Viṣṇu slept on the thousand-headed snake, Āticēṭaṉ.

சிம்மாசனத்தில் இருந்தமை

318. அங்கண் ஞாலம் அனைத்தும் புயத்தில் வைத்(து)
ஆடகக் கிரியில் புலி வைத்தவன்
சிங்க ஆசனத்(து) ஏறி இருப்பு(து) ஓர்
சிங்க ஏ(று) எனச் செவ்வி சிறக்கவே.

Ascends the throne

The burden of protecting the entire world
Fell on his shoulders;
He inscribed the tiger symbol on the Himālayās;
On lion-shaped throne,
A brave he-lion sat, so it looked.

319. பணிப்பணத்(து) உறை பார்க்(கு) ஒரு நாயகன்
பல்கலைத்துறை நாவில் இருந்தவன்
மணிப்பணிப் புயத்தே சிங்க வாகனி
வந்து செந்திருமாதொர்(டு) இருக்கவே.

The lord of the earth resting
On the head of Āticēṭan,
One who is well-versed in all arts,
On his arms, adorned with sapphire inlaid ornaments
The guardian angel of Heroism **Kāḷi**
In her divine vehicle of lion
And that of wealth, **Lakshmi**
Dwell without intervel!

அரசியர் அருகு வீற்றிருத்தல்

320. தரு மடங்க முகந்து தனம் பொழி
தன் புயம் பிரியாச் சயப் பாவையும்

திரு மடந்தையும் போல், பெரும் புண்ணியம்
செய்த தேவியர் சேவித்(து) இருக்கவே.

Queens sat by his sides

The karpaka tree, in the heaven,
Gives whatever one wants at once;
The hand of Kulōttuṅkaṉ rains gold
Putting the kaṟpaka tree to shame!
His lawful queen, Tiyākavalli
And his beloved concubime Ēḻicai Vallapi
Sat on both sides and paid homage to him.

நாடக மகளிர்

321. நாடகாதி நிருத்தம் அனைத்தினும்
நால்வகைப் பெரும் பண்ணினும் எண்ணிய
ஆடல் பாடல் அரம்பையர் ஒக்கும் அவ்
அணுக்கிமாரும் அநேகர் இருக்கவே.

Dancers and Singers

In Dramas that originated from dances,
In the four great divisions of music,
In song and dance,
Court-dancers were well versed
And equal to heavenly dancer, Rampai-
Numerous such maidens were assembled there!

இசை வல்லார் சூழ்ந்தமை

322. சூதர், மாகதர் ஆகிய மாந்தரும்,
தூய மங்கலப் பாடகர்தாமும், 'நின்
பாதம் ஆதரர் ஆயவர் கட்(கு) எலாம்
பைம்பொன் மௌலி' எனப் புகழ் பாடவே.

Musicians gather round

Cūtar, Mākatar, those who hail the king
In sitting and standing positions
Those who sing auspicious songs of greetings
Their theme was:
The princes, and chieftains
Who depend on your patronage
Consider your feet as their crown and dependable refuge.

இசைவல்லார் விண்ணப்பித்தல்

323. வீணை, குழல், யாழ், தண்ணுமை வல்லவர்,
'வேறு வே(று) இவை நூறு விதம்படக்
காணலாம் வகை கண்டனம்; நீ இனிக்
காண்டல் வேண்டும்; எனக் கழல் போற்றவே.

Appeal for listening to music

Veeṇā[1] and its older version, *yāḻ*[2]
The flute and the drum
Were tuned by skilled musicians
In hundreds of ways;
They entreated the king
To listen to their music!

1&2 Veeṇā and *yāḻ* - Stringed instruments (Veeṇā, yāḻ)

இசை வல்லான் குலோத்துங்கனே

324. தாளமும் செலவும் பிழையா வகை
தான் வகுத்தன தன் எதிர் பாடியே
காளமும் களிறும் பெறும் பாணர்தம்
கல்வியில் பிழை கண்டனன் கேட்கவே.

Kulōttuṅkaṉ, the connoisseur of music

Raising and lowering of the pitch,
The beat of the drums,
Kulōttuṅkaṉ ordained in a musical treatise
Well versed and well trained
Ministrels demonstrated their skill!
With bugles, elephants, horses!
Some times the king pointed out
Some subtle mistakes!

சிற்றரசர் குடை, சாமரம் பிடித்தது

325. வெங்களிற்றில் இழிந்தபின் வந்(து) அடி
வீழ்ந்த மன்னவர் வெந்நிடு முன் இடு
தங்கள் பொற்குடை, சாமரம் என்(று) இவை
தாங்கள் தம் கரத்தால் பணிமாறவே.

Seated on an elephant Kulōttuṅkaṉ waged relentless war
Unable to withstand his assault
Many kings ran away from the battle-field
Leaving their parasols and ornamental fans!
When he got down from his elephant,
The defeated kings took up the
Abandoned parasols and
Fly floppers to serve him!

சிற்றரசர் தேவியர் சேடியர் ஆனமை

326. தென்னர் ஆதி நராதிபர் ஆனவர்
தேவிமார்கள் தன் சேடியர் ஆகவே
மன்னர் ஆதிபன் வானவர் ஆதிபன்
வந்(து) இருந்தனன் என்ன இருக்கவே.

Defeated Queens become hand-maiden

Kulōttuṅkaṉ sat on his throne
Like the king of Tēvas, Indra,
The queens of defeated kings like Pāṇṭiyas
Served as the hand-maiden of the Cōlā queen.

அமைச்சர், படைத்தலைவர் சூழ்தல்

327. மண்ட லீகரும் மாநில வேந்தரும்
வந்(து) உணங்கு கடைத்தலை வண்டைமன்
தொண்டைமான் முதல் மந்திரப் பாரகர்
சூழ்ந்து தன் கழல் சூடி இருக்கவே.

Surrounded by ministers

Kings and chieftains wait for the
Audoence of the king at his gates!
The chieftains of Vaṇṭai
The heroic Toṇṭaimāṉ
And other ministers fell at his feet
And sat around him!

திறை செலுத்த அரசர் நின்றனர்

328. முறையிடத், திருமந்திர ஓலையாள்
முன் வணங்கி,'முழுவதும் வேந்தர்தம்
திறையிடப் புறம் நின்றனர்' என்றலும்,
செய்கை நோக்கி வந்(து) எய்தி இருக்கவே.

Kings queue up for paying tributes

The royal officer, *Tirumantira ōlai*[1],
Regulates audience with the king!
The kings and chieftains who want
To pay their tributes

He announced in the court
And conveyed his permission to them!
The kings entered the Hall
Causing a stampede!

1. *Tirumantira Ōlai* - Courtier in charge of Royal orders

அரசர் வரிசை

329. தென்னவர், வில்லவர், கூபகர்,
சாபகர், சேதிபர், யாதவரே,
கன்னடர், பல்லவர், கைதவர்,
காடவர், காரிபர், கோசலரே –

Assembly of kings[1]

Pāṇṭiyar cēras, cūpakar
King of Kollam
Burmese, king of Cēti Yatava king
Kaṉṉakaṭikas, pallavas, kaitavar,
Kāṭaver, kāripar, and the king of Kōcala.

1.Forty eight kings are mentioned. It is difficult to identify most of them.

330. கங்கர், கராளர், கவிந்தர்,
துமிந்தர், கடம்பர், துளும்பர்களே,
வங்கர், இலாடர், மராடர்,
விராடர், மயிந்தர், சயிந்தர்களே.

The same

King of Mysore, Kaṅkar
Karāḷar, Kavintar, tumintar
Kaṭampar, Tuḷumpar
Vaṅkar, Ilāṭar, Marāṭar
Virāṭar, Mayintar, Cayintar

331. சிங்களர், வங்கணர், சேகுணர்,
சேவணர், செய்யவர், ஐயணரே,
கொங்கணர், கொங்கர், குலிங்கர்,
சவுந்தியர், குச்சரர், கச்சியரே —

Cinkalar, Vankar, Cēkunar
Cēvanar, Ceyyavar Aiyanar
Konkanar, Konkar, Kulinkar
Cavantiyar Kuccarar, Kacciyar

332. வந்தவர், மத்திரர், மாளுவர்,
மாகதர், மச்சர், மிலேச்சர்களே,
குத்தர், குணத்தர், வடக்கர்,
துருக்கர், குருக்கர், வியத்தர்களே; —

The same

Vattavar, Mattirar, Māluvar
Mākatar, Maccar, Milēccar
Kuttar, Kunattar, Vatakkr
Turukkuar, Kurukkar and Vigattar.

வந்தவர் வணங்கினர்

333. 'எந் நகரங்களும், நாடும்,
எமக்(கு) அருள் செய்தனை! எம்மை இடச்
சொன்ன தனங்கள் கொணர்ந்தனம்'
என்(று) அடிசுடு கரங்களோடே,

Presentation of tributes

'By your grace, we are ruling
Our countries and cities;
We have brought the tributes
Prescribed by you[1]

So saying, they fell att his feet
Paying homage to him!

திறைப்பொருள் வரிசை

334. ஆரம் இவை; இவை! பொற்கலம்,
ஆனை இவை; இவை! ஒட்டகம்,
ஆடல் அயம் இவை! மற்(று) இவை
ஆதி முடியொடு பெட்டகம்!

ஈரம் உடையன நித்திலம்!
ஏறு நவமணி கட்டிய
ஏகவடம் இவை! மற்(று) இவை
யாதும் விலைஇல் பதக்கமே!

List of tributes

Golden chains, golden vessels
Elephants, camels
Strong horses, crowns
Along with a casket

335. இவையும் இவையும் மணித்திரள்
இனைய இவை கனகக் குவை!
இருளும் வெயிலும் எறித்திட
இலகு மணிமகரக் குழை!
உவையும் உவையும் இலக்கணம்
உடைய பிடி! இவை உள் பக(டு)!
உயர்செய் கொடி இவை! மற்(று) இவை
உரிமை அரிவையர் பட்டமே!

The same

Cool gems, single chains
Studded with nine kind of gems
And priceless dollars!

336. 'ஏறி அருள அடுக்கும் இந்
நூறு களிறும்! இவற்(று) எதிர்
ஏனை அரசர் ஒருத்தர் ஓர்
ஆனை இடுவர் எனில், புவி
மாறி அருள அவர்க்(கு) இடை
யாரும் இசைவம்' எனப், பல
மான அரசர் தனித்தனி
வாழ்வு கருதி உரைப்பரே!

The same

These are heaps of sapphire
These heaps are of gold
These are emerald ear-studs
Shedding luster and darkness
(Perhaps due to twinkling)
These are she-elephants
Having limbs as prescribed in sastras!
Here are he-elephants!
Flags raised high!
The ornaments of the fore-head
Of palacee hand maiden.

குலோத்துங்கன் வினவுதல்

337. 'அரசர், அஞ்சல்!' என அடி இரண்டும் அவர்
முடியின வைத்தருளி, அரசர், 'மற்(று),

உரைசெயும் திறைகள் ஒழிய, நின்றவரும்
உளர்கொல்? என்(று) அருளு பொழுதினில்,

Kulōttuṅkaṉ's query
'Kings, don't be afraid' said Kulōttuṅkaṉ
And placed his feet on their heads
Apart from those who have paid
Are there any defaulters?' queried he

கலிங்க மன்னன் திறையிடாமை

338. 'கடவ தம்திறை கொ(டு) அடைய வந்(து) அரசர்
கழல் வணங்கினர்கள்! இவருடன்
வடகலிங்கர் பதிஅவன் இரண்(டு) விசை
வருகிலன் திறைகொ(டு)' எனலுமே.

King of kaliṅkam fails to pay
'All those scheduled to pay tributes
Have already paid, but the king
Of Northern kaliṅkam has failed
To pay his dues twice'
The chief officer of the court replied.

குலோத்துங்கன் முறுவல்

339. 'உறுவ(து) என்கொல்? என நிலைகுலைந்(து) அரசர்
உயிர் நடுங்க, 'ஒளிர் பவளவாய்
முறுவல் கொண்ட பொருள் அறிகிலம்; சிறிதும்
முனிவு கொண்ட(து) இலை வதனமே!'

Kulōttuṅkaṉ shines

The assembled kings shuddered
At the thought of the consequences!
Kulōttuṅkaṉ's smile appears in his shining coral mouth-
Its meaning, none knows
There was no trace of anger in his face!

கலிங்கனைச் சிறைப்பிடிக்க ஆணை

340. 'எளியன் என்றிடினும், வலிய குன்(று) அரணம்
இடிய, நம் படைஞர் கடிது சென்(று)
அளி அலம்பு மத மலைகள் கொண்(டு) அணைமின்!
அவனையும் கொணர்மின்!' எனலுமே.

'The king of Kaliṅkam is weak
But protected by surrounding hills;
Let our soldiers demolish his fortifications
Let mountain like he-elephants
With flowing chor assail his army
Bring him alive here', ordered he!

தொண்டைமான் விடை கொண்டது

341. இறை மொழிந்த அளவில், 'எழு கலிங்கம் அவை
எறிவன்' என்று கழல் தொழுதனன்
மறை மொழிந்தபடி மரபின் வந்த குல
திலகன் வண்டை நகர் அரசனே.

Karuṇākaraṉ offers to lead the army

No sooner the king gave him command
'I will destroy Kaliṅkam with its seven divisions'
Declared the king of the Vaṇṭai town

The distinguished hero by his lineage
Mentioned even in Vedas.

விடை அளித்தான்

342. ‘அடைய அத் திசைப் பகை துகைப்பன்’ என்(று)
ஆசை கொண்(டு) அடல் தொண்டைமான்
‘விடை எனக்(கு) எனப் புலி உயர்த்தவன்
விடை கொடுக்க, அப்பொழுதிலே

The strong commander, Toṇṭaimāṉ, said
‘I will destroy all enemies of the North
I take leave’
The king with the tiger flag
Permitted the expedition

படைகள் திரண்டன

343. கடல் கலக்கல்கொல்? மலை இடித்தல்கொல்?
கடுவிடப் பொறிப் பண பணிப்
பிடர் ஒடித்தல்கொல்? படை நினைப்(பு) எனப்
பிரளயத்தினில் திரளவே.

Army mobilised

At that moment, the four-fold army of Kulōttuṅkaṉ
Was mobilized in strength-
It looked like the floods of a deluge,
Does it intend to destroy the mountains
Or to churn the oceans
Or to break the head of Āticēṭaṉ[1]
With cruel poison and a hood with lovely dots?

[1] The mythical snake which is presumed to bear the burden of the earth

344. வளை கலிப்பவும், முர(சு) ஒலிப்பவும்,
மரம் இரட்டவும், வயிர மாத்
தொளை இசைப்பவும், திசை இபச் செவித்
தொளை அடைத்தலைத் தொடரவே.

The march of the army was heralded;
The conches blew; drum beat was heard;
The bugles with shapely holes sounded;
War-drums sounded!
The resounding voice of all these
Reverbrated through the ear-holes of *ticai yāṉai*[1]

1. *ticai yāṉai*: Mythical elephants, eight in number, guarding the eight directions.

இருள் பரப்பின

345. குடை நிரைத்தலின், தழை நெருக்கலின்,
கொடி விரித்தலின், குளிர் சதுக்கம் ஒத்(து)
இடை நிரைத்தலின் பகல் கரப்ப உய்த்(து)
இருநிலப் பரப்(பு) இருள் பரக்கவே,

Dense formations

Fan shaped parosals
Made up of peacock's *tōkai*[1]
Looked like formations of dense rows!
The flags of the king were seen everywhere!
These flags and parasols
Filled the hairzon,
Covering the sun's rays!
Darkness descended on earth!

1.*Tōkai* - feather, plumage.

ஒளி பரவிற்று

346. அல(கு) இல் கண்தழல் கனல் விரித்தலால்,
அரிய பொற்பணிக் கலன் எறித்தலால்,
இலகு கைப்படை கனல் விரித்தலால்
இருள் கரக்கவே! ஒளி பரக்கவே.

Darkness disappears

The eyes of the soldiers emitted
Fire out of intense anger!
Their golden ornaments also
Sent out glittering rays of light!
The clash of swords and other weapons also
Did cause flashes of light!
And hence, the former darkness disappeared
And light spread over the battle-field!

நாற்படைச் சிறப்பு

347. அகில வெற்பும் இன்(று) ஆனை ஆனவோ!
அடைய மாருதம் புரவி ஆனவோ!
முகில் அனைத்தும் அத் தேர்கள் ஆனவோ!
மூரி வேலை போர் வீரர் ஆனவோ!

The grandeur of the four fold army

Have all mountains on earth
Transformed into elephants?
The swift wind into horses?
Vast clouds into chariots?
The entire ocean into soldiers?

படைப் பெருக்கை வியத்தல்

348. பார் சிறுத்தலின் படை பெருத்ததோ?
படை பெருத்தலின் பார் சிறுத்ததோ?
நேர் செறுத்தவர்க்(கு) அரிது நிற்பிடம்!
நெடு விசும்(பு) அலால் இடமும் இல்லையே!

Wonder at the vast army

Has the earth become smaller?
Or the cōlā army larger?
There is not even standing space
For the angry looking soldiers?
There is space left only in the immense skies!

படை பொறுமை இழந்தன!

349. என எடுத்(து) உரைத்(து) அதிசயித்து நின்(று)
இனைய மண்ணுளோர், அனைய விண்ணுளோர்
மன நடுக்(கு) உறப் பொறை மறத்தலால்
மாதிரங்களைச் சாதுரங்கமே.

Army losing patience

Spread over all the directions
The four fold army lost its patience,
Itching for the battle!
This sight struck terror
Into the hearts of earthly beings!
Heavenly angels were also in such a predicament!

யானைப் படை

350. கடல்களைச் சொரி மலை உள என, இரு
கடதடத்திடை பொழி மதம் உடையன;

கனல் விளைப்பன முகில் உள என, விழி
கனல் சினத்தன; கரியொடு பரிகளின்
உடல் பிளப்பன பிறை சில உள என,
உயர் மருப்பின; உலகுகள் குலைதர
உரும் இடிப்பன வட அனல் உள என,
ஒலி முகில் கட கரிகளும் மிடையவே.

Elephant division

The flowing chor of elephants
Looks as if a mountain
Is belching sea-waters!
From its broad cheeks, the chor flows
Like lightening clouds!
The long tusks of elephants
The eyes of elephant emit fire of anger!
Look like crescent moons
Capable of tearing asunder
The bodies of enemies!
'All creatures of the world
shudder as if confronted
By the doomsday fire!'
The noise of elephants seem
To echo this!

குதிரைப் படைச் சிறப்பு

351. முனைகள் ஒட்டினர் முடியினை இடறுவ;
முடியின் முத்தினை விளை புகழ் என, நில
முதுகில் வித்துவ; நிலம் உறு துகள் அற
முகில் மதிப்பன; முகில் விடு துளியொடு

கனை கடல் திரை நிரை என, விரைவொடு
கடல் இடத்தினை வலம் இடம் வருவன;
கடலிடத்(து) இறும் இடி என, அடி இடு
கவனம் மிக்கன; கதழ் பரி கடுகவே!

The bravery of cavalry

In Kulōttuṅkan̲'s army
The horses are capable of
Kicking the crown from the heads of kings,
Sworn to battle!
The gems of the crown are scattered on the ground,
As if to spread their fame,
Jump over the clouds
To quench the dust raised by their hoofs!
Rain drops from the clouds
On the waves of the sea;
His horses are capable of
Going round the world like the waves
With thundering noice, they touch the ground
In grand style swift in gait
Thus marched the cavalry of cōlān̲

தேர்ப் படை

352. இரு நிலத்திடர் உடைபடும் உருளன;
இருபுடைச் சிற(கு) உடையன; முனை பெறின்
எதிர் பறப்பன; விடு நுகமொடு கடி(து)
இவுளி முற்படின் இது பரிபவம் எனும்
ஒரு நினைப்பினை உடையன; வினையன;
உயர்செய் மொட்டொடு மலர்என நிறுவிய;
ஒழிதரச் செறு உறுபுனல் உமிழ்வன;
உல(கு) அளப்பன; இரதமும் மருவியே.

Chariotc division

The Chariots hasten, scaling down
Rising grounds of this great earth
Winged on both sides; in the battle-field
They are capable of flying across
They consider the fleeting horses
As a shame on their prowess!
Like the lotus and its bud
The base of the chariots are formed
With artfully decorated designs
They rain water stopping war
They are capable of going round the earth

காலாட்படைச் சிறப்பு

353. அல(கு)இல் வெற்றியும் உரிமையும் இவைஎன,
அவயவத்தினில் எழுதிய அறிகுறி
அவை எனப், பல வடு நிறை உடையவர்;
அடி புறக்கிடில் அமரர்தம் உலகொடு இவ்
உலகு கைப்படும் எனினும், அ(து) ஒழிபவர்;
உடல் நமக்(கு) ஒரு சுமை என முனிபவர்;
உயிரை விற்(று) உறு புகழ் கொள உழல்பவர்;
ஒருவர் ஒப்பவர்; படைஞர்கள் மிடையவே.

Foot soldiers

Heroic medallious and commands
Adorned the soldicrs of the cōlān army!
Their face and chest were battle-scrarred!
Not even for heaven and earth
Will they re-trace their steps in the field!

They consider the body as a burden!
They will willingly lay down
Their lives for the sake of fame!
Every soldier was equally competant!
Matchless soldiers marched farward!

வீரர் சிரிப்பொலி

354. விழித்த விழி தனி விழித்த விருதர்கள்,
விடைத்து வெடு வெடு சிரித்த வாய்
தெழித்த பொழு(து) உடல் திமிர்க்க இமையவர்
திகைக் கண் மத கரி திகைக்கவே.

The heroic men looked sternly
And the sound of derisive laughter at the enemies
The heavenly beings shuddered
At this grim noise!
The elephants guarding the eight directions
Were also wonder-struck at this!

குதிரைகளின் வாய்நுரை

355. உகத்தின் முடிவினில் உகைத்த கனைகடல்
உவட்டி எனமுகில் முகட்டின்மேல்
நகைத்த விடுபரி முகக்கண் நுரைசுர
நதிக்கண் நுரை என மிதக்கவே,

Foaming horses

At the end of an *yukam*[1]
Waves of the sea rise upto the skies;
So did the horses gallop upto the clouds,
Foaming in their mouth!

That foam resembled
The foams on the heavenly **Ganga**!

1. *yukam* - Time is divided into cyclic pattern of four yukam; At the end of each yukam the world is destroyed.

யானைகளின் பிளிறல் ஒலி

356. கழப்(பு) இல் வெளில் சுளி கதத்தில் இரு கவுள்
கலித்த கடம் இடி பொறுத்த போர்க்(கு)
உழப்பி வருமுகின் முழக்கில் அலை கடல்
குளிக்கும் முகில்களும் இடக்கவே

Elephants trumpet

The elephants of the cōlāṉ army
Chor driffing from their gems
Broke away from their posts!
Thundered their way into the enemy's rank
They trumpeted in heroic joy
Water-seeking clouds
Drew back in fear!

தேர்ப்படை உருள்தல்

357. கடுத்த விசை இருள் கொடுத்த உல(கு) ஒரு
கணத்தில் வலம் வரு கணப்(பு) இல் தேர்
எடுத்த கொடி திசை இபத்தின் மத மிசை
இருக்கும் அளிகளை எழுப்பவே.

Chariots roll on

Chariots of the cōlāṉ army
Are capable of going around the earth in a moment!
Flags are tied up in Chariots
And the fluttering of the flags
Awaken the bees in the chor
Of the elephants, guarding directions!

எழுந்தது சேனை

358. எழுந்தது சேனை! எழலும்,
இரிந்தது பாரின் முதுகு!
விழுந்தன கானும் மலையும்!
வெறுந்தரை ஆன திசைகள்!

Marching of the army

The army marched ahead,
Breaking the back of the earth;
Mountains crumbled down
Along with forests!
Even the mighty rivers
Turned into arid land!

அதிர்ந்தன திசைகள்

359. அதிர்ந்தன நாலு திசைகள்!
அடங்கின ஏழு கடல்கள்!
பிதிர்ந்தன மூரி மலைகள்!
பிறந்தது தூளி படலம்!

Cloud of dust

As the army marched ahead,
All the four directions shuddered!
Even the seven oceans stood still!
Mighty mountains were torn asunder!
A cloud of dust arose!

மேகம் வறண்டது

360. நிலம் தரு தூளி பருகி
நிறைந்தது வானின் வயிறு!
வலம் தரு மேக நிரைகள்
வறந்தன நீர்கள் சுவறி!

Clouds dry up

The dust raised by the marching army
Saturated the skies stomach!
And the dust dried up
The rain-bearing clouds!

புழுதி தணிந்தது

361. தயங்(கு) ஒளி ஓடை வரைகள்
தரும் கடதாரை மழைகள்
அயங்களின் வாயின் நுரையின்
அடங்கின தூளி அடைய!

Dust subsides

Elephants looked like mountains
Raining 'chor',
The swift horses belch foams!
Chor of elephants and foam of horses
Abated the cloud of dust!

இரவு தங்கிப் பகலில் சென்றன

362. எழு தூளி அடங்க நடந்(து) உதயத்(து)
ஏகும் திசை கண்டு அது மீள விழும்
பொழு(து) ஏகல் ஒழிந்(து) கடற்படை எப்–
பொழுதும் தவிராது வழிக் கொளவே,

Resting at night

The ocean of army marched ahead,
Knowing directions during day-time,
Rested at the approach of evening,
Sleeping at night to relieve the strain
Thus they marched without interval!

கருணாகரன் யானை ஏறிச் செல்லல்

363. தண் ஆரின் மலர்த் திரள்தோள் அபயன்
தான் ஏவிய சேனை தனக்(கு) அடையக்
கண் ஆகிய சோழன் சக்கரம் ஆம்
கருணகரன் வாரணம் மேற்கொளவே,

Mounting on an elephant, Karuṇākaraṉ proceeds

The mighty shoulders of Kulōttuṅkaṉ
Were adorned by the cool *ātti*[1] garland!
On his orders, Karuṇākaraṉ
Marched as the chief commander,
He is the eye of the cōlāṉ army,
He is the chakra, divine weapon
Of Kulōttuṅkaṉ an incarnation of **Tirumāl!**
He rode on an elephant
At the head of the cōlāṉ army!

1. Ātti- The royal insigmia of cōlāṉ

பல்லவ அரசன் செல்லல்

364. தொண்டையர்க்(கு) அரசு முன்வரும் சுரவி
துங்க வெள் விடை உயர்த்த கோன்

வண்டையர்க்(கு) அரசு பல்லவர்க்(கு) அரசு
மால் களிற்றின்மிசை கொள்ளவே

Pallava king follows

Karuṇākaraṉ is the king of Toṇṭai Nādu
The king of the capital Vaṇṭai
And his elder brother
The scion of the divine cow Kāmatēṉu!
The white bull is enshrined in his flag
Also rode on an elephant,
Assisting his brother.

முடிகொண்ட சோழன் செல்லல்

365. வாசிகொண்(டு) அரசர் வாரணம் கவர
வாணகோவரையன் வாள் முகத்
தூசிகொண்டு, முடி கொண்டே சோழன் ஒரு
சூழி, வேழமிசை கொள்ளவே.

Muṭikoṇṭa cōlāṉ follows

Vāṉakōvaraiyaṉ rode on a horse
To capture elephants of enemy kings
Muṭikoṇṭa cōlāṉ also rode on
A stately elephant
Decorated with a bright cloth
On its fore head.

இரைவேட்ட புலி

366. மறித்தோடி யெவ்வரசுஞ் சரிய வென்று
வருமனுக்கைப் பல்லவர்கோன் வண்டை வேந்தன்
எறித்தோடை இலங்குநடைக் களிற்றின் மேற்கொண்(டு)
இரைவேட்ட பெரும்புலிபோல் இகன்மேற் செல்ல,

Predatory tiger

Karuṇākaraṉ can topple any kingdom
At the orders of Kulōttuṅkaṉ;
He rode on a stately elephant
Adorned with a decorated cloth
In its for head
And marched forward
Like a predatory tiger
In search of its prey!

ஆறுகள் பல கடந்தமை

367. பாலாறு, குசைத் தலைப், பொன் முகரிப்
பழஆறு, படர்ந்(து) எழு கொல்லி எனும்
நாலாறும் அகன்(று), ஒரு பெண்ணை எனும்
நதி ஆறு கடந்த, நடந்(து) உடனே

Crossing many rivers

The army of Kulōttuṅkaṉ
Crossed many a river
Pālāṟu, Kucaittalai āṟu
Poṉmukari, kolli āṟu;

368. வயலாறு புகுந்து, மணிப் புனல் வாய்
மண்ணாறு, வளம் கெழு குன்றி எனும்
பெயலாறு, பரந்து நிறைந்து வரும்
பேர் ஆறும் இழிந்(து) அது பிற்படவே.

The same

The army passed through
Stretches of paddy fields
Rivers Maṇṇāṟu, Kuṉṟi
And the mighty Krishṇā;

369. கோதாவரிநதி மேலாறொடு குளிர்
பம்பா நதியொடு சந்தப் பேர்
ஓதாவரு நதிஒரு கோதமையுடன்
ஓலிநீர் மலிதுறை பிற(கு) ஆக,

The same

Passed through the noble Kōtāvari
The cool pāmpa river and
The river Kāyathri, and
The noisy Kōṭipali river
And the Kautami river!

கலிங்கம் புகுதல்

370. கடையில் புடைபெயர் கடல் ஒத்(து), அமரர்
கலங்கும் பரிசு கலிங்கம் புக்(கு)
அடையப் படர்எரி கொளுவிப், பதிகளை
அழியச் சூறைகொள் பொழுதத்தே.

Army enters Kaliṅkam

At the end of an *yukam*
A deluge of the sea occurs!
So did the army enter **Kaliṅkam**
Even the heavenly angels shuddered at this sight
They plundered the villages
And set fire to them!

கலிங்கர் அரசனிடம் முறையிடுதல்

371. கங்கா நதி ஒருபுறம் ஆகப் படை
கடல் போல் வந்து! கடல் வந்தால்

எங்கே புகலிடம்? எங்கே இனி அரண்?
யாரே அதிபதி இங்(கு)? என்றே,

Kaliṅkar's appeal to their king

The cōḻāṉ army enters
Like the mighty kanga?
(Is not kanga in the North?)
Where shall we find refuge!
Where is the king and fort?
Who will save us from this diaster?

கலிங்கம் எரிதல்

372. இடிகின்றன மதில்! எரிகின்றன பதி!
எழுகின்றன புகை பொழில்எல்லாம்
மடிகின்றன! குடி கெடுகின்றனம்! இனி
விளைகின்றன படை பகை என்றே,

Kaliṅkam burns

Fort walls are demolished!
The towns are set on fire!
A clound of smoke arises!
The groves are on fire
The army lays siege to our towns
The citizens bewailed their plight!

373. உலகுக்(கு) ஒருமுதல் அபயற்(கு) இடுதிறை
உரைதப்பிய(து); எம(து) அரசே எம்
பல கற்பனைகளை நினைவுற்றிலை; வரு
படை மற்(று) அவன் விடுபடை' என்றே

Appeal

You have failed pay tribute
To the peerless Kulōttuṅkan̲
The king of all this earth
You ignored our warnings
The invading army comes from turn

நடுங்கும் கலிங்கர்

374. உரையில் குழறியும், உடலில் பதறியும்
ஒருவர்க்(கு) ஒருவர் முன் முறையிட்டே
அரையில் துகில் விழ அடையச் சனபதி
அடியிற் புக விழு பொழுதத்தே,

Kaliṅkar shudder

The people of Kaliṅkam fell at the
Feet of their king,
Their bodies shuddering in fear
Blabbering plaintive words,
Their under garments slipping
From their lips!

கலிங்கன் செயல்

375. அந்தரம் ஒன்(று) அறியாத வடகலிங்கர்
குலவேந்தன் அனந்த பன்மன்
வெந்தறுகண் வெகுளியினால் வெய்(து) உயிர்த்து,
கைபுடைத்து வியர்த்து நோக்கி.

Reaction of Kaliṅkam king

Innocent People were ignorant of the emerging conflicts!
An̲anta Van̲man̲, their king was fearless!
In anger, he clapped his hands,

Perspiring profusely with long hot sighs
Angrily looked at his people

கலிங்க மன்னன் சீற்றம்

376. ‘வண்டினுக்கும் திசை யானை மதம் கொடுக்கும்
மலர்க்கவிகை அபயற்(கு) அன்றித்,
தண்டினுக்கும் எளியனோ? என வெகுண்டு
தடம் புயங்கள் குலங்க நக்கே

Kaliṅkam king is enraged

The cōlan̲’s parasol encompasses
All the directions,
Bees are enabled to drink
The chor of the elephants,
Guarding the directions!
Am I so weak as to be
Afraid of his army!
If he has come personally
I may be afraid!

377. ‘கான் அரணும், மலை அரணும், கடல் அரணும்
சூழ் கிடந்த கலிங்கர் பூமி
தான் அரணம் உடைத்(து) என்று கருதாது,
வருவதும் அத் தண்டு போலும்!’

The sme

The Kaliṅka country is surrounded
By fortification of forest
Mountain and the ocean on all sides;
Has not the cōlan̲ army
Weighed our fortification?

அமைச்சன் அறிவுரை

378. என்று கூறலும், எங்க ராயனான்
'ஒன்று கூறுவன்; கேள்!' என்(று) உணர்த்துவான்.

Minister's advice

After the king, a minister
And senior commander, Eṅkarāyaṉ
Rose and told the king
'I have one thing to tell you'

379. அரசர் சீறுவ ரேனும், அடியவர்
உரை செயா(து) ஒழியார்கள்; உறுதியே.

The same

The kings may get angry
But his advisers will not fail
To show the beneficial path!

380. ஏனை வேந்தை எறியச் சயதரன்
தானை அல்லது, தான் வரவேண்டுமோ?

To conquer other kings
Is it necessary
For the cola king to come in person?
Will not his army suffice?

381. விட்ட தண்டினின் மீனவர் ஐவரும்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலும் நீ!

The same
Have you not heard of
The destruction of the Pāṇṭiyas
By the cōlāṉ army?

382. போரின் மேல் தண்(டு) எடுக்கப் புறக்கிடும்
சேரர் வார்த்தை செவிப்பட்ட(து) இல்லையோ?

The same
Where cōlāṉ mobilized his army
And proceeded towards the cera country
Have you not heard of the ignominious retreat
Of the Cēra king?

383. வேலை கொண்டு விழிஞம் அழித்ததும்,
சாலை கொண்டதும் தண்டு கொண்டே அன்றோ?

The same
Destroying the navy of Cēras
Along with the town of Viḻiñam
Near Tiruvaṉatapuram,
The Kāntalūrc Cālai, crucial highway
Was captured by the cōḻāṉ army-
Have you not heard of it?

384. மாறுபட்(டு) எழு தண்(டு) எழ வந்தவர்
ஏறு பட்டதும் இம்முறையே அன்றோ?

The same

Tēravarcaṉ, was also defeated
For daring to oppose the cōlāṉ
Have you not heard of it?

385. தளத்தொடும் பொரு தண்(டு) எழுப் பண்டொர்நாள்
அளத்தி பட்ட(து) அறிந்திலை; ஐய! நீ!

The same

Have you not heard of, oh king,
The fall of Aḷatti in Mysore?

386. தண்ட நாயகர் காக்கும் நவிலையில்
கொண்ட(து) ஆயிரங் குஞ்சரம் அல்லவோ ?

The same

When the cōlāṉ commanders
Destroyed the town of Navilai
Have you not heard of
The capture of thousand elephants?

387. உழந்து தாம் உடை மண்டலம் தண்டினால்
இழந்த வேந்தர் எனையர் என்(று) எண்ணுகேன்!

I fail to keep count of the number of those
Who lost their kingdoms in their
With battle the cōlāṉ army!

388. கண்டு உன் புயவலி நீயும்! அத்
தண்டு கொண்(டு) அவன் சக்கரம் வந்ததே!

The very same army is marching towards us!
At its head, Karuṇākaraṉ, like
The *chakra*[1] of Kulōttuṅkaṉ, comes!
If you have got any doubts
You may find them clarified in the battle field.

1 *Chakra* - Divined disk – like weapon of Tirumāl

இன்று சீறினும் நாளை நினைப்பாய்!

389. இன்று சீறினும் நாளைய அச் சேனை முன்
நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால்!

To-day you are infuriated by my words
To-morrow, when you stand before that army
You will think of me!

கலிங்க மன்னன் சினமொழி

390. என்(று) இவை உரைத்தலும், 'எனக்(கு) எதிர்
உரைக்க இமையோர்களும் நடுங்குவர்! புயக்
குன்(று) இவை செருத்தொழில் பெறாது நெடு
நாள் மெலிவு கொண்டபடி கண்டும் இலையோ ?

Angry words of the king of Kaliṅkam

Even the Devas will be afraid
Of contradicting my views!
But you have expressed your views without fear
My shoulder have slimmed
By not facing any battle field for long-
Have you not noticed?

391. 'பிழைக்க உரை செய்தனை! பிழைத்தனை!
எனக்(கு) உறுதி பேசுவது வாசி கெடவோ?

முழைக்கண் இளவாள் அரி முகத்(து) எளி(து)எ-
னக் களிறு முட்டி எதிர் கிட்டி வருமோ?

The same

You have spoken wrong words,
Yet you survive!
To do good to me,
You should not speak of
Dishonourable things!
Will an elephant dare to confront
The cub of a lion in its own cage?

392. 'என்னுடைய தோள் வலியும், என்னுடைய
வாள்வலியும் யாதும் அறியாது பிறர்போல்
நின்னுடைய பேதைமையினால் உரைசெய் –
தாய்! இது நினைப்பளவில் வெல்ல அரிதோ?

The same

You have spoken as if you donot know
The sword I wield by the might
Of my shoulders!
As a ignoramus, you have spoken;
I can conquer this army in no time

போர் மேற்செல்ல ஆணை

393. 'வேழம், இரதம், புரவி, வெம்படைஞர்
என்(று) இனைய நம்படை விரைந்து கடுகச்
சோழ குலதுங்கன் விட வந்து விடு
தண்டின் எதிர்சென்(று) அமர்தொடங்குக! எனவே.

Let our army divisions
Of elephant, cavalry, chariots and soldiers
Confront the army sent by Kulōttuṅkaṉ;
We have got an oopportunity for battle.

394. பண்ணுக வயக்களிறு! பண்ணுக
வயப்புரவி! பண்ணுக கணிப்பில் பல்தேர்!
நண்ணுக பசைட்செருநர்! நண்ணுக
செருக்களம் நமக்(கு) இகல் கிடைத்த(து) எனவே,

Adorn our elephants, let the horses be saddled
Adorn our chariots, mobilize our soldiers
Let us hasten to the battle field
To prove our prowess!

395. கலிங்கம் அவை எழினும் எழுந்த(து) ஒரு
பேரொலி, கறங்கு கடல் ஏழும் உடனே
மலங்கி எழு பேரொலி எனத், திசை
திசைப்புற வரும் தொனி எழுந்த பொழுதே!

Noise emanating from Kaliṅkam army

Great noise arose in the seven-fold Kaliṅkam
It resembled the noise of the seven oceans rising together
People in all the eight directions
Shuddered at this great turmoil!

யானை, குதிரைப் படைகள்

396. தொளை முக மதமலை யதிர்வன
தொடு கடல் பருகிய முகில் எனவே!
வளைமுக நுரைஉக வருபரி
கடலிடை மறிதிரை என எழவே!

Divisions of elephants and horses

Elephant hills, with flowing chor
From their trunks
Seemed like big clouds
That have drunk water from the ocean!
Nimble-footed horses with foaming mouths
Resembled the waves of the ocean!

குடை, கொடி

397. இடை இடை அரசர்கள் இருகுடை
கவரிகள் இவை கடல் நுரை எனவே!
மிடைகொடி பிறழ்வன மறிகடல்
அடையவும் மிளிர்வன கயல் எனவே!

Parasol and flags

The Kaliṅkar Army looked like an ocean!
In the midst of the ocean
The parasols and fans of kings
Looked like the foams of the waves!
Fluttering flags glittered like swirling fishes!

படையின் ஒலி

398. அலகினோடு அலகுகள் கலகல
எனும்ஒலி, அலைதிரை ஒலிஎனவே!
உலகுகள் பருகுவ(து) ஒருகடல்
இதுஎன, உடலிய படை எழவே!

Clang of arms

Soldiers swarmed in dense formations
Their swords and spears made clanging noises!
The army looked like the furious sea
At end of any '*yukam*'
When a deluge occurs!

தேர்களும் வீரர்களும்

399. விசைபெற விடு பரி இரதமும்
மறிகடல் மிசைவிடு கலம் எனவே!
இசை பெற உயிரையும் இகழ்தரும்
இளையவர் எறி சுற(வு) இனம் எனவே,

Chariots and soldiers

Chariots drawn by swift horses
Seemed like ships in the ocean!
Soldiers, who would willingly lay down
Their lives for the sake of fame
Resembled the killer-sharks therein!

படை எழுச்சியின் விளைவு

400. விடவிகள் மொடு மொடு விசைபட
முறிபட எறிபட நெறிபடவே!
அடவிகள் பொடிபட, அருவிகள்
அனல்பட, அருவரை துகள் படவே!

Marching army's devastation

As the Kalinkam army marched on,
Trees fell down crumbling
Making a huge noise!
Forests reduced to dust,
Water-falls hot up emitting fire!

Huge mountains powdered to sand!
Thus making way, it marched on!

சினத்தீயும் முரசொலியும்

401. அறை கழல் இளையவர் முறுகிய
சினஅழல் அதுவட அனல் எனவே!
முறைமுறை முரசுகள் மொகுமொகு
அதிர்வன முதிர்கடல் அதிர்(வு) எனவே!

Soldiers wore heroic anklets;
Their anger resembled the fire
At the end of the world;
The war drums beat on,
The drum beat resembling the roar of the seas!

படைகளின் நெருக்கம்

402. ஒருவர்தம் உடலினில் ஒருவர்தம்
உடல்புக உறுவ(து) ஓர் படி உகவே!
வெருவர மிடைபடை நடு ஒரு
வெளி அறவிழி இட அரி(து) எனவே!

Dense army formations

The formation of the army was so dense
That bodies jostled with each other!
The army marched menacingly
To strike terror into the hearts of on lookers,
As if to threaten this matchless world with destruction
And to transcend the limits of human vision!

போர் தொடங்குக

403. ‘வெளி அரி(து) என, எதிர் மிடை படை
மனுபரன் விடுபடை அதன் எதிரே
எளி(து) என, இரைபெறு புலி என,
வலியினொடு ‘எடும்! எடும்!எடும்!’ எனவே!

Let us commence war

Kaliṅkam army confronted the cōlā army,
Filling all the available space,
They thought they can defeat the cōlā
Like a predator on seeing its prey
The army roared to go ahead with its war!

12. போர் பாடியது

போரின் பேரொலி

404. எடும்! எடும்!எடும்! என எடுத்த(து) ஓர்
இகல்ஒலி, கடல்ஒலி இகக்கவே!
'விடு!விடு!விடு!பரி கரிக்குழாம்
விடும்!விடும்! எனும்ஒலி மிகைக்கவே!

12. PŌR PĀṬIYATU

(Description of battle scenes)

War Cries

Let us begin the war
Let us begin the war
Soldiers on both camps shouted
War cries reverberated like the roar of the ocean!
Charge the cavalry here!
Send the elephant division there!
These war cries went on increasing!

405. வெருவர வரிசிலை தெறித்த நாண்
விசைபட திசைமுகம் வெடிக்கவே!
செருஇடை அவரவர் தெரித்த(து) ஓர்
தெழி உலகுகள் செவிடு எடுக்கவே!

The same

They stringed their strong bows
Rending all the directions by their noise!
In the battle-field
War cries struck the world dumb!

இருபடை மோதல்

406. எறி கடலொடு கடல் கிடைத்தபோல்
இருபடைகளும் எதிர் கிடைக்கவே

மறி திரையொடு திரை மலைத்த போல்
வருபரியொடு பரி மலைக்கவே!

Confrontation of the two Armies

Both the armies dashed against each other
Like the confrontation of two oceans;
The charging of the cavalries
Like the confrontation of foaming waves!

யானைப்படையும் தேர்ப்படையும்

407. கன வரையொடு வரை முனைத்தபோல்
கடகரியொடு கரிமுனைக்கவே!
இன முகில் முகிலொடும் எதிர்த்தபோல்
இதரமொடு இரதமும் எதிர்க்கவே!

Elephant divisions and chariots

Warring elephants dashed against each other
Like the clash of the mountains!
Chariots charged against each other
Like the clash of the clouds!

வீரர்களும் அரசர்களும்

408. பொருபுலி புலியொடு சிலைத்தபோல்
பொருபடரொடு படர் சிலைக்கவே!
அரியினொடு அரியினம் அடர்ப்ப போல்
அரசரும் அரசரும் அடர்க்கவே!

Kings and soldiers

Soldiers dashed against each other
Like the clash of fierce tigers!
The kings confronted each other
Like the fighting lions!

விற்போர் ஒலி

409. விளைகனல் விழிகளின் முளைக்கவே!
மினல்ஒளி கனல்இடை எறிக்கவே!
விளைசிலை உரும் என இடிக்கவே!
வடிகணை நெடுமழை படைக்கவே!

The twang of the bows

The flaming eyes of the soldiers
Struck like burning with fury lightening!
The twang of bow-strings
Struck like thunder
Raining a stream of arrows!

குருதி ஆறு

410. குருதியின் நதிவெளி பரக்கவே!
குடைஇனம் நுரைஎன மிதக்கவே!
கரிதுணி படும்உடல் அடுக்கியே
கரைஎன இருபுடை திடக்கவே!

River of flood

Blood flowed like a river
Parasols floated like foams
The severed bodies of elephants
Seemed like the banks of the river!

போரிடும் யானைகள்

411. மருப்போடு மருப்(பு)எதிர் பொருப்(பு) இவை
எனப்பெரு மதக்கரி மருப்பின் இடையே

நெருப்பொடு நெருப(பு) எதிர் சுடர்ப்பொறி
தெறித்(து) எழ நிழல்கொடி தழல் கதுவவே!

Battling elephants

Elephants dripping chor
Fought against each other!
They were as huge as mountains
They tusks clashed
Sparks of flame scattered
Lighting the flags nearby!

412. நிழல்கொடி தழல் கதுவலின் கடி(து)
ஒளித்தவை நினைப்பவர் நினைப்பதன் முனே
அழல்படு புகைக்கொடி எடுத்தன
புதுக்கொடி அனைத்தினும் நிரைத்த(து) எனவே!

The same

Shade giving flags were burnt
Even before such a thought
Disappeared for a moment
Flag like formations of smoke
Went up in the air
Like new flags!

413. இடத்திடை வலத்திடை இருத்திய
துணைக்கரம் நிகர்த்தன அடுத்த கரியின்
கடத்(து) எழுமதத்(து) இடை மடுத்தன
சிறப்பொடு கறுத்தன அவற்றின் எயிறே!

The same

Elephants dripping chor
Blackened the white tusks

Creating an illusion that
It has three trunks
To spectators, it was a gruesome sight
Of elephants with three proboscis!

414. எயிறுகள் உடைய பொருப்பை வலத்திடை
எதிர் எதிர் இருபணை இட்டு முறுக்கிய
கயிறுகள் இவைஎன அக்கரடக்கரி
கரமொடு கரம்எதிர் தெற்றி வலிக்கவே!

The same

Rows of tuskers confronted each other
Intertwining their trunks-
Thus engaged in a tug of war,
Between their tusks
Appearing like twining ropes!

குதிரைகளின் தோற்றம்

415. முடுகிய பவனபதத்தில் உகக்கடை
முடிவினில் உலகம் உணச் சுடர்விட்(டு) எழு
கடுகிய வட அனலத்தினை வைத்தது
களம்உறு துரக கணத்தின் முகத்திலே.

Clash of cavalries

At the dooms day
Fierce fire will rage
Devouring the world
So did cavalries charge
Spelling doom for the enemies!

வீரர்களின் பெருமிதம்

416. களம் உறு துரக கணத்தின் முகத்(து) எதிர்
கறுஇலர் சிலர் கலவித்தலை நித்தில
இளமுலை எதிர்பொரும் அப்பொழு(து) இப்பொழு(து)
எனஎதிர் கரியின் மருப்பு எதிர் நிற்பரே.

Heroic pride

Some defied the charge of the cavalries
And stood unmoved!
Some others confronted the tusks of elephants
With as much joy as
When they embraced the Gem-studded breasts
Of their wives in amorous battle!

வாள் வீரர்களின் சிறப்பு

417. எதிர்பொரு கரியின் மருப்பை உரத்தினில்
இற எறிபடையின் இறுத்து மிறைத்(து) எழு
சதுரர்கள் மணி அகலத்து மருப்(பு) அவை
சயமகள் களபம் முலைக்குறி ஒத்ததே!

The heroism of swordsmen

The tuskers fought against men!
The soldiers received the tusks
In their chests
And cut them off with swords
The bloody wounds at their chests
Resembled the breasts of the Goddess of victory
Strewn with sandal-paste!

குதிரை வீரர்களின் சிறப்பு

418. சயமகள் களப முலைக்(கு) அணி யத்தகு
தனிவடம் இவைஎன, மத்தக முத்தினை
அயம் எதிர் கடவி மதக்கரி வெட்டினர்
அலைபடை நிரைகள் களத்து நிரைக்கவே!

Horsemen battle

The horsemen charged against the elephants
And severed the heads of elephants
Spilling gems!
It looked like a garland if gems
Fit to adorn the breasts of the goddess of victory,
Strewn with sandal paste!

விற்போர்

419. அலைபடை நிரைகள் நிரைத்த செருக்களம்
அமர்புரி களம்என, ஒப்பில விற்படை
தலைபொர எரிய நெருப்பினின் மற்றது
தழல்படு கழைவனம் ஒக்கினும் ஒக்குமே!

Bowmen battle

The battle field looked like
A cummingling of oceans!
The matchless bowmen aimed their arrows
And struck at the heads of enemies
Setting them ablaze!
The field looked like burning bamboo groves!

420. தழல்படு கழைவனம் எப்படி அப்படி
சடசட தமரம் எழப் பகழிப்படை

அழல்படு புகையொ(டு) இழிச்சிய கைச்சிலை
அடுசிலை பகழி தொடுத்து வலிப்பரே!

The same

The twang of the string of the bows
Resembled the deafening noise
Of the burning bamboo groves
The soldiers bent their bows
Emitting fire and smoke
Also resembling burning bamboo groves!

421. அடுசிலை பகழி தொடுத்து விடப்புகும்
அளவினில் அயம் எதிர் விட்டவர் வெட்டின
உடல்சில இருதுணி பட்டன; பட்டபின்
ஒருதுணி கருதும் இலக்கை அழிக்குமே!

The same

As bowmen took their unerring aim
At their enemies
Horsemen of the enemy camp
Charged against them
And severed their body into two parts!
But even one part of the body
Continued its mission,
Sending their deadly arrows,
Killing the targeted enemies!

422. ஒருதுணி கருதும் இலக்கை அழித்தன
உருவிய பிறைமுகம் அப் பகழித்தலை

‘அரி(து) அரி(து) இதுவும்’ எனப் பரி உய்ப்பவர்
அடியொடு முடிகள் துணிந்து விழுத்துமே!

The same

One part of the severed bodies
Struck at their targets
Another part released
A crescent-moon shaped arrow
Severing the horsemen’s heads and legs!

குதிரை வீரர் அருஞ்செயல்

423. அடியொடு முடிகள் துணித்து விழப்புகும்
அள(வு) அரிதொடை சமரத்தொ(டு) அணைத்தனர்
நெடியன சிலசரம் அப்படி பெற்றவர்
நிறைசரம் நிமிர விடத்துணி உற்றவே!

Rare deeds of horsemen

At the moment of heads and legs
Being severed
The horsemen caught hold of the
Deadly arrows
And threw them into the air,
Severing the bodies of swordsmen!’

424. நிறை சரம்நிமிர விடத் துணி உற்றவர்
நெறியினை ஒடி எறிகிற்பவர் ஒத்(து)எதிர்
அறைகழல் விருதர் செருக்(கு)அற வெட்டலின்
அவர் உடல் இருவகிர் பட்டன பட்டவே.

The same

Before being severed by the arrows,
The swordsmen brought havoc
And cut the soldiers into two parts-
As if cleaning the wild bushes
All those who opposed had their bodies
Severed into two parts!

கலிங்கர் தடுத்தனர்

425. விடுத்த வீரர் ஆயுதங்கள்
மேல் விழாமலே நிரைத்(து)
எடுத்த வேலி போல் கலிங்கர்
வட்டணங்கள் இட்டவே.

Kaliṅkam soldiers defence

The cōlāṉ army aimed its weapons
At the Kaliṅkam army
The shields of Kaliṅkaṉs formed
A formation like a fort wall
Keeping the weapons at bay!

கேடகங்கள் சிதைந்தன

426. இட்ட வட்டணங்கண் மேல்எ–
றிந்த வேல் திறந்த வாய்
வட்டம் இட்ட நீள் மதிற்கு
வைத்த பூழை ஒக்குமே!

Shields damaged

Spears were aimed at Kaliṅkar
Who defended by forming

A fort wall of shields
More and more spears were sent
Making a dent in them!
The holes resembling small gates at the fort-walls

வாளும் உலக்கையும்

427. கலக்கம் அற்ற வீரர் வாள் க–
லந்த சூரர் கைத்தலத்(து)
உலக்கை உச்சி தைத்தபோது
உழும் கலப்பை ஒக்குமே!

Swords and pestles

Swordsmen battled against
Pestle–wielders!
The swords struck and stuck at the end of pestles
Looking like ploughs

துதிக்கையும் சக்கரமும்

428. மத்த யானையின் கரம் க–
ருண்டு விழ வன்சரம்
தைத்த போழ்தின் அக்கரங்கள்
சக்கரங்கள் ஒக்குமே!

Trunks and wheels

The arrows cut the trunks of
And sent elephants,
Rolling down!
Rolling trunks resembled wheels!
Struck by arrows!

யானையின் முத்துக்கள்

429. வெங்களிற்றின் மத்தகத்தின்
வீழும் முத்து, வீரமா
மங்கையர்க்கு மங்கலப்
பொரி சொரிந்த(து) ஒக்குமே!

Heads and wheels

The heads of elephants were served
Spilling pearls
It looked like the showering
On the bridge of *pori*[1]
At the time of marital rituals!

1. *Pori*: Puffed grains showered on the couple as a mark of blessings

கேடகங்களுடன் வீரர்கள்

430. மறிந்த கேடகம் கிடப்ப
மைந்தர் துஞ்சி வைகுவோர்,
பறிந்த தேரின் நேமியோடு
பார் கிடப்பது ஒக்குமே!

Soldiers with shields

Soldiers fell down on the filed
Along with their shields!
It looked like chariots destroyed
With broken wheels
And the Main parts

தண்டும் சக்கரமும்

431. களித்த வீரர் விட்ட நேமி
கண்டு வீசு தண்டிடைக்

குளித்த போழ்து கைப்பிடித்த
கூர்மழுக்கள் ஒக்குமே!

Pestles and wheels

Elated by the fighting spirit,
Soldiers threw the chakra weapons;
Their opponents struck with pestles,
Chakra stuck to the pestle
Resembling sharp battle axes!

குறையுடல்களும் பேய்களும்

432. கவந்தம்ஆட முன்பு தம் க–
ளிப்பொ(டு) ஆடு பேய் இனம்
நிவந்தம் ஆடல் ஆட்டுவிக்கும்
நித்தகாரர் ஒக்குமே!

Truncated bodies and ghosts

Truncated bodies danced
Followed by the dancing ghosts,
Resembling the master of the puppet show
Directing the dance of puppets!

ஒட்டகம் –யானை–குதிரை

433. ஒட்டகங்கள், யானை, வால் உ–
யர்த்தமா அழிந்தபோர்
விட்(டு) அகன்று போகிலாது
மீள்வ போலும் மீளுமே!

Camels, elephants, horses

Soldiers, riding on camels
Elephants and horses,
Were killed first!

Without riders, these animals
Retreated from the battle-field
Raising their tails in fear!
They are now returning
To the battle-field
As if not accepting defeat!

யானைகளும் மேகங்களும்

434. பிறங்கு சோரி வாரியில் பி–
விற்றி வீழ் களிற்(று) இனம்
கறங்கு வேலை நீர் உணக் க–
விழ்ந்த மேகம் ஒக்குமே!

Elephants and clouds

With a trumpeting cry
The elephants fell dead
Into the river of blood!
It looks like clouds
Falling on the ocean
To drink the sea-water!

வாள் வீரர்

435. வாளில் வெட்டி வாரணக்கை
தோளில் இட்ட மைந்தர்தாம்,
தோளில் இட்டு நீர்விடும் து–
ருத்தியாளர் ஒப்பரே!

Heroism if soldiers

Soldiers severed the trunks of elephants
And put them on their shoulders!
They resembled the watering men with
Turutti[1] on their shoulders!

1.*Turutti*- A leather squirt for spring ling water

வில் வீரர்

436. நேர்முனையில் தொடுத்த பகழிகள்
நேர்வளைவில் சுழற்றும் அளவினில்
மார்(பு) இடையில் குளித்த பகழியை
வார்சிலையில் தொடுத்து விடுவரே!

Bowmen

In the headlong confrontation
Soldiers aimed arrows at their opponents!
Having exhausted their arrows,
Opponents tried to defend
By wielding their bows!
Arrows struck to their chests!
Retrieving arrows from their chests
They aimed them at their tormentors!

ஈட்டி வீரர் செயல்

437. அசைய உரத்(து) அழுத்தி இவுளியை
அடு சவளத்(து) எடுத்த பொழு(து) 'அவை
விசைய மகட்(கு) எடுத்த கொடி' என
விருதர் களத்(து) எடுத்து வருவரே!

Spearmen destroy horses

Heroes penetrated the chests of horses
With their deadly spears
And lifted the horses along with them,
Parading it like the flag
Of the goddess of victory!

தொடை அறுந்த வீரர்

438. இரு தொடை அற்(று) இருக்கும் மறவர்கள்
எதிர்பொருகைக் களிற்றின் வலிகெட
ஒரு தொடையைச் சுழற்றி எறிவர்கள்;
ஒரு தொடை இட்டு வைப்பர் எறியவே!

Soldiers with severed thighs

Soldiers fell down
With their thighs severed!
On an advancing elephant
They threw one of their legs,
Keeping of other one
As a weapon for the future!
Such is the undaunted will of the soldiers!

வாள் வீரர் மடிந்தனர்

439. இருவருரத் தின்உற்ற சரிகையின்
எதிரெதிர்புக்(கு) இமைக்கு மளவினில்
ஒருவரெனக் கிடைத்த பொழுதினில்
உபயபலத்(து) எடுத்த(து) அரவமே.

Fall of swordsmen

Swordsmen were engaged in direct fight!
At the same time, their chests
Were pierced by the swords!
When they fell down, simultaneously
There arose a roar of applause
From both sides of the field!

போர்வீரர் யானையின்மேல் இருத்தல்

440. பொருநர்கள் சிலர்தமு ரத்தி னில்கவிழ்
புகர்முகம் மிசையடி யிட்ட திற்பகை
விருதரை அரிவர்சி ரத்தை அச்சிரம்
விழுபொழு(து) அறையெனும் அக்க ளிற்றையே.

Soldiers climb upon elephants

When an elephant lowered its head
To gore the soldiers,
They pounced upon the elephants
And climbing on it
Beheaded the soldiers on the elephants back
The severed heads seemed to order
The elephant to kill the enemies!

படைக் கருவி இழந்தவர் செயல்

441. விடுபடை பெறுகிலர் மற்(று) இனிச்சிலர்
விரைபரி விழஎறிதற்கு முற்பட
அடுகரி நுதற்பட விட்ட கைப்படை
அதனையொர் நொடிவரையில் பறிப்பரே.

The deeds of soldiers who lost weapons

Soldiers have exhausted their weapons
Wanting to kill swift-horses
They retrieved their weapons
On the forehead of dead elephants!

அஞ்சியவரைத் தவிர்த்தல்

442. அமர்புரி தம(து) அகலத்(து) இடைக் கவிழ்
அடுகரி நுதலில் அடிப்பார்; இக்களி(று)

எம(து) என இருகண் விழிக்க உட்கினர்
என விடுகிலர் படைஞர்க்கு வெட்கியே!

Sparing the weak-willed

The battle raged fiercely!
The elephant bent down
To gore the enemies!
They retaliated by beating the foreheads of elephants
With pestles!
The soldiers on the elephants back
Cried 'The elephants are ours
Closing their eyes in fear!
They did not aim their weapons
At such cowards!

கருணாகரன் போரில் ஈடுபடல்

443. அல(கு) இல் செருமுதிர் பொழுது வண்டையர்
அரசன், அரசர்கள் நாதன் மந்திரி,
உலகு புகழ் கருணாகரன் தன(து)
ஒருகை இருபணை வேழம் உந்தவே!

Karuṇākaraṉ enters the fray

When the battle raged to it's climax
Karuṇākaraṉ to whom all the world
Showers praise,
The chieftain of the Vaṇṭai town
Drove into the enemies formation;
His elephant with one trunk and two tusks!

இரு படைகளும் வெற்றிக்கு முந்தின

444. உபய பலமும் விடாது வெஞ்சமம்
உடலு பொழுதினில் வாகை முன்கொள
அபயன் விடுபடை ஏழ்கலிங்கமும்
அடைய ஒருமுகம் ஆகி முந்தவே!

Both sides strive for victory

With indomitable will,
Both sides fought grimly
For snatching victory!
The army sent by kulōttuṅkaṉ
And the army of seven fold kaliṅkam
Fought a fierce battle
Throwing all their resources into it!

இருபுறப் படைகளும் அழிந்தன

445. அணிகள் ஒருமுகம் ஆக உந்தின!
அமரர் அமர் அது காண முந்தினர்!
துணிகள் படமத மா முறிந்தன!
துரக நிரையொடு தேர் முறிந்தவே!

Formations of army hastened to fight;
The angels came down from heavens
To witness the battle royal!
Elephants fall dead, cut into pieces!
Groups of horses and chariots
Were broken into pieces!

காலாட் படை அழிதல்

446. விருதர் இருதுணி பார் நிறைந்தன
விடர்கள் தலை மலையாய் நெளிந்தன!
குருதி குரைகடல்போல் பரந்தன
குடர்கள் குருதியினமேல் மிதக்கவே!

Destruction of foot soldiers

The earth was filled
With the severed bodies!
Groups of heads were heaped
Like mountains!
The blood spread like the noisy sea!
The intestines floated on it!

களத்தில் பேரொலி

447. கரிகள் கருவிகயோடு சிந்தின
கழுகு நரியொடு காகம் உண்டன!
திரைகள் திசைமலையோ(டு) அடர்ந்தன
திமில குமிலம் எலாம் விளைந்தவே!

Great noise in the battle-field

Groups of elephants fell down
Eagles, foxes and crows feasted!
River of blood reached the elephants guarding directions!
Painful moans reverbrated!

அனந்தவன்மன் பின்னிடுதல்

448. புரசை மதமலை ஆயிரம் கொடு
'பொருவம்' எனவரும் ஏழ்கலிங்கர்தம்
அரசன், உரைசெய்த ஆண்மையும் கெட
அமரில் எதிர்விழயா(து) ஒதுங்கியே!

Anantavarunan retreats

With an army of thousand elephants
The king of the Seven-fold Kaliṅkam
Swore to wrest victory and gave battle
Flasifying his vows,
He ingloriously retreated!

அனந்தவன்மன் ஒளிதல்

449. 'அறியும் முழைகளிலோ பதுங்கிய(து)?
அரிய பிலன் இடையோ மறைந்தது?
செறியும் அடவியிலோ கரந்தது?
தெரிய அரிய(து)! ஏனா அடங்கவே

Anantavanman goes underground

Has the disappeared into a known cave,
Or inside an under-ground chamber,
Or into a dense forest?
It is difficult to find out!

கலிங்கர் சிதறி ஓடல்

450. 'எதுகொல் இது? இது மாயை ஒன்றுகொல்
எரிகொல்? மறலிகொல்? ஊழியின் கடை
அதுகொல்?' என அலறா விழுந்தனர்
அலதி குலதியொ(டு) ஏழ்கலிங்கரே.

Kaliṅkam army scattered

The Kaliṅkan army scattered
With fearful cries,
Wondering whether scenes in the battle filed
Were an illusion,

Or a devastating fire at the end of an *yukam*
Or the god of death, emaṉ
Creating havoc in their formations!
What a fearful sight
(defying reason!)

கலிங்கர் களம்விட்டு ஓடுதல்

451. வழிவர் சிலர்! கடல் பாய்வர்! வெங்கரி
மறைவர் சிலர்! வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்! சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே!

Kaliṅkam army flees

Some sneaked out!
Some fell into the ocean!
They ran for their lives!
Some took refuge besides the
Bodies of elephants!
Some others ran in search of
A safe place,
Fearing further quest,
Some disappeared into caves,
Some into dense bushes and shrubs!
No two followed the same path!

452. ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்!
உடலின் நிழலினை ஓட அஞ்சினர்!
'அருவர் வருவர்'எனா இறைஞ்சினர்
'அபயம்! அபயம்! எனா நடுங்கியே!

They ran for their lives
As if competing in a running race!
They were afraid of even their shades,
Mistaking them for pursuing Tamils
We surrender, they kept on crying!

புறமுதுகு காட்டி ஓடல்

453. 'மழைகள் அதிர்வன போல் உடன்றன
வளவன் விடுபடை வேழம்' என்(று) இருள்
முழைகள் நுழைவர்கள்! 'போரில் இன்று நம்
முதுகு செயும் உபகாரம் என்பரே!

Kaliṅkar run showing their backs

Kaliṅkam soldiers entered caves
Shouting the Cōlan̲ elephants
Advanced fiercly, like the clash of
The thunder clouds'
Today we have saved our lives
By showing our *backs*[1]!
Thanks to our backs!

1. *backs* - It is one of the heroic convertions that if an enemy shows his back and runs away, he should not be attacked.

ஒற்றை ஆடையுடன் ஓடல்

454. ஒரு கலிங்கம் ஒருவன் அழித்த நாள்
ஒரு கலிங்கம் ஒருவர் உடுத்ததே!

Fled with undergarments

When Kaliṅkam was destroyed
By the peerless chieftain
Kaliṅkar had to flee

In their under garments
(upper garments have already fallen)

யானை குதிரைகளைக் கைப்பற்றல்

455. அப்படிக் கலிங்கர் ஓட
அடர்த்(து) ஏமு சேனை வீரர்
கைப்படும் களிறும் மாவும்
கணித்(து) உரைப்பவர்கள் யாரே?

Horses and elephants fall into the hands Cōlāṉ

Thus the Kaliṅkaṉ army scattered
Who could estimate
The number of horses and elephants
That fell into the hands of Cōlāṉ army?

காயமுற்ற யானைகள்

456. புண்தரு குருதி பாயப்,
பொழிதரு கடமும் பாய,
வண்டொடும் பருந்தினோடும்
வளைப்(பு) உண்டகளி(று) அநேகம்!

Wounded elephants

Wounded elephants oozing blood
And chor!
Eagles drink the blood,
The bees its chor!
Such elephants fell into
The hands of Cōlāṉ

யானைகள் பிடி படல்

457. ஒட்(டு) அறப்பட்ட போரில்
ஊர்பவர் தம்மை வீசிக்
கட்(டு) அறுத்தவர் போல் நின்று
கட்(டு) உண்ட களி(று) அநேகம்.

Capture of elephants
When defeated in the filed
Army ranks breaking loose
Elephants threw out its drivers
Stood motionless like the sages
And fell into the hands of Cōlāṉs

அரசரும் யானைகளும்

458. வரைசில புலிக ளோடு
வந்து கட்(டு) உண்டவேபோல்,
அரைசரும் தாமும் கட்(டு) உண்(டு)
அகப்பட்ட களி(று) அநேகம்!

Kings and elephants
Many a King was imprisoned
Along with their elephants!
It looked like mountains
Tied to tigers!

எண்ணற்றவை

459. நடை வயப்பரி, இரதம், ஒட்டகம்,
நவநிதிக் குல மகளிர் என்(று)

அடைவ அப்பொழு(து) அவர்கள் கைக்கொளும்
அவை கணிப்ப(து) அருமையே!

Countless booty
Strong horses, foot soldiers
Heaps of chariots, camels
Nine kinds of gems
Ladies – it will be difficult
To estimate their number!

அரசனையும் கவர்க

460. இவைகவர்ந்தபின்,'எழு கலிங்கர்தம்
இறையையும் கொடு பெயர்தும்' என்(று)
அவன் இழிந்துழி அறிக'என்றனன்
அபயன் மந்திரி முதல்வனே!

Seize the king also
"After seizure of all these
Let us bring the Kaliṅkan king
Find out his hide-out"
Ordered Karuṇākaraṉ the commander

ஒற்றர் தேடினர்

461. உரைகள் பிற்படும் அளவில், ஒற்றர்கள்
ஒலிகடல் படை கடிதுபோய்
வரைகளில் புடை தடவி அப்படி
வனம் இலைபுரை தடவியே!

Spies go in search

No sooner the command of Karuṇākaraṉ was issued
Spies in large number resembling the noisy ocean
Marched forward!
In mountains and forest
They searched without leaving
Any bush unexplored.

ஒற்றர்களின் பேச்சு

462. 'சுவடு பெற்றிலம் அவனை; மற்(று) ஒரு
சுவடு பெற்றனம்; ஒருமலைக்
குவடு பற்றிய(து) அவன் அடற்படை;
அது குனிப்(பு) அரி(து)' எனவுமே!

Talk of spies

There is no sign of his hiding place!
We have got another clue!
At the top of a hill
The remnants of his army
Still countless
Was standing!

மலையை அடைந்தனர்

463. எக்குவடும், எக்கடலும், எந்தக் காடும்,
இனிக் கலிங்கர்க்(கு) அரணாவ(து) இன்றே! நாளும்
அக்குவடும், அக்கடலும் வளைந்து வெய்யோன்
அத்தமனக் குவ(டு) அணையும் அளவில் சென்றே

Reached the mountain

No hill or sea or forest
Will be safe haven for Kaliṅkaṟ!
So saying they searched the hills and islands during day,
At the fall of night
They reached their hiding place!

விடியளவும் காத்தல்

464. தோலாத களிற்று அபயன் வேட்டைப் பன்றி
தொழு அடைத்துத் தொழுவதனைக் காப்பார்போல
வேலாலும், வில்லாலும் வேலி கோலி
வெற்(பு) அதனை விடியளவும் காத்து நின்றே!

Stood guard till dawn

Soliders guarded the hill till dawn
Just as a wild pig. Hunted and captured by Klottunkan
Is kept in a pen guarded by soldiers,
The soliders made a fence with bows and spears
And stood guard till dawn!

மலை சிவந்தது

465. செம்மலையாய் ஒளி படைத்த(து) யாதோ என்றும்,
செங்கதிரோன் உதயஞ்செய்(து) உதயம் என்னும்,
அம்மலையோ இம்மலையும்' என்னத் தெவ்வர்
அழிகுருதி நதிபரக்க அறுக்கும் போழ்தில்!

The hill reddens

The hill where Kaliṅkar hid themselves
Appeared in red light!
'Is this the hill where
the sun rises daily?

The on-lookers wondered!
These signs appeared
When Cōlaṉ army destroyed
And blood flowed in all directions!

கலிங்கர் திகம்பரரானார்!

466. வரைக் கலிங்கர் தமைச்சேர மாசை ஏற்றி,
வன்தூறு பறித்தமயிர்க் குறையும் வாங்கி,
அரைக்கலிங்கம் உரிப்புண்ட கலிங்கர் எல்லாம்,
'அமணர்' எனப் பிழைத்தாரும் அநேகர் ஆங்கே!

Some became jains

By fleeing to a hill
Kaliṅkar earned dishonour!
They run through bushes
And lost their hairs and dress!
They plucked the remaining hairs
And escaped saying
'We are *Tikamparar*[1]'

1.*Tikamparar* – Naked Jains who had directions only as dress.

கலிங்கர் வேதியரானார்!

467. வேடத்தால் குறையாது முந்நூல் ஆக
வெஞ்சிலைநாண் மடித்(து) இட்(டு), 'விதியால் கங்கை
ஆடப்போந்(து) அகப்பட்டேம்; கரந்தோம்' என்றே
அரிதனைவிட்(டு) உயிர்பிழைத்தார் அநேகர் ஆங்கே!

Some became Brahmins

Wearing the bow-string
As the sacred thread.
"We came to bathe in River Ganga,
We were afraid of looking at you,
We are not Kaliṅkaṉ soldiers"

So saying they gave up enmity
And escaped as Brahmins!

சிலர் புத்தரானர்!

468. குறி ஆகக் குருதிகொடி ஆடை ஆகக்
கொண்(டு) உடுத்துப் போர்த்துத் தம் குஞ்சி முண்டித்(து)
'அறியீரோ சாக்கியரை உடை கணடால்? என்
அப்புறம்? என்(று) இயம்பிடுவர் அநேகர் ஆங்கே!

Some became Buddhist monks

Flags dipped in blood
Some wore as saffron dress
They had their heads shaven
'We are Buddhist monks
Don't you know by our dress?'
So saying, some others escaped!
Don't you know by our dress?
So saying, some others escaped.

கலிங்கர் பாணர் ஆனார்

469. 'சேனை மடிகளம் கண்டேம்; திகைத்து நின்றேம்;
தெலுங்கரேம்!' என்றுசில கலிங்கர் தங்கள்
ஆனைமணியினைத் தாளம் பிடித்துக் கும்பிட்(டு),
'அடிப்பாணர்' எனப் பிழைத்தார் அநேகர் ஆங்கே!

Some became minstrels

We are Telugus, we were stunned
By the devastion caused by the Cōlan army
Using the bells of elephants
As a musical instrument
'We are your humble minstrels'
So saying some Kaliṅkar escaped!

கலிங்க வீரர் முற்றும் அழிதல்

470. இவர்கள்மேல் இனிஒருவர் பிழைத்தார் இல்லை!
எழுகலிங்கத்(து) ஓவியர்கள் எழுதி வைத்த
சுவர்கள்மேல் உடல்அன்றி, உடல்கள் எங்கும்
தொடர்ந்து பிடித்(து) அறுத்தார்முன் அடைய ஆங்கே!

Complete destruction of Kaliṅkar

None else other those described above
Escaped destruction!
Except perhaps the portraits on walls
Drawn by the painters of seven fold Kaliṅkar
All others were killed by the by the Cōlaṉ army

தொண்டைமான் சோழனை வழிபடல்

471. கடற்கலிங்கம் எறிந்து, சயத் தம்பம் நாட்டிக்
கடகரியும், வயமாவும், தனமும், கொண்டு,
சுடர்ப்படைவாள் அபயன் அடி அருளினோடும்
சூடினான் வண்டையர்கோன் தொண்டைமானே!

Toṇṭaimāṉ pays homage to kulōthuṇkaṉ

The chieftain of Vaṇṭaiyar
Karuṇākarat Toṇṭaimāṉ
Conquered the coastal Kaliṅkam
And established a victory pillar!
Presented Kulōttuṅkaṉ
With elephants with chor
And victorious horses
And fell at his feet
A a mark of respect!

13. களம் பாடியது

களச் சிறப்பு

472. தேவாசுரம் ராமாயணம்
மாபாரதம் உள' என்(று)
ஓவாஉரை ஓயும்படி
உள(து) அப்பொரு களமே.

13. KAḶAM PĀṬIYATU

(Of the heroic deeds in the battle-field battle- field)

Battle-field of Kaliṅkam
Excels previous wars
Between Tēvar and Acurar
Between Rāmaṉ and Ravaṇaṉ
Between Pāṇṭavar and Kavuravar
Abating the ceaseless talks about them!

பேய் வேண்டக் காளி அணுகல்

473. 'காலக்களம் அதுகண்டருள்
இறைவீ! சூடி(து)' எனவே,
ஆலக்களம் உடையான் மகிழ்
அமு(து) அக்களம் அணுகி

Ghost requests Kāḷi to see Kaliṇkam battle field

Civaṉ wears ālakāla poison in his neck;
He rejoices in the company
Of Kāḷi, His nectar
'Goddess, kindly see the field
Where the lord of death holds sway'

காளி களங்கண்டு வியத்தல்

474. ‘என்னே ஒரு செருவெங்களம்!’
எனவேஅதி சயமுற்(று)
அந்நேரிழை அலகைக்கணம்
அவைகண்டிட மொழியும்

Kāḷi wonders at the sight of battle – filed

What a grisly sight
This battle-field presents?
Kāḷi wondered
And addressed Her group of spirits.

யானையும் கப்பலும்

475. உடலின்மேல் பலகாயும் சொரிந்தது பின்கால்
உடன்பதைப்ப உதிரத்தே ஒழுகும் யானை
கடலின்மேல் கலந்தொடரப் பின்னே செல்லும்
கலம்போன்று தோன்றுவன! காண்மின்! காண்மின்!

Elephant and ship

Rivers of blood everywhere
Blood flows from the wounds of elephants
Rear legs move and swim,
It looks like a ship following a ship
In the high seas!

புதையுண்ட குதிரை

476. நெடுங்குதிரை மிசைக்கலனை சரியப் பாய்ந்து
நிணச்சேற்றில் கால்குளிப்ப நிரையே நின்று
படுங்குருதிக் கடும்புனலை அடைக்கப் பாய்ந்த
பலகுதிரைத் தறிபோன்ற பரிசு காண்மின்!

Horses stuck up

Battle horses breaking their saddles and bridles
Get stuck up in the mud of serum!
This looks like a row of planks
To check the flood of blood!

வீரர் முகம்மலர்ந்து கிடந்தமை

477. விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!

Happy death

Family men of a noble nature
Find pleasure
When guests and the poor eat together!
So did the fallen heroes
Rejoice when eagles and falcons
Made a meal of their bodies!
Their lotus faces look brighter!

வீரரும் கருமிகளும்

478. சாம்அளவும் பிறர்க்(கு) உதவா தவரை நச்சிச்
சாருநர்போல், வீரர்உடல் தரிக்கும் ஆவி
போம்அளவும் அவர் அருகே இருந்துவிட்டுப்
போகாத நரிக்குலத்தின் புணர்ச்சி காண்மின்!

Heroes and misers

Misers donot help others
Until their death-

Fools associate themselves with them!
So also foxes keep company with heroes
Until their death!
After death also,
They did not depart!

வண்டும் விலைமாதரும்

479. மாமழைபோல் பொழிகின்ற தானம் வாரி
மறுத்துவிழும் கடகளிற்றை வெறுத்து வானோர்
பூமழைமேல் பாய்ந்(து) எழுந்து நிரந்த வண்டு
பொருட்பெண்டிர் போன்றமையும் காண்மின்! காண்மின்

Bees and prostitutes

Battle elephants rain chor
Like the great showers!
Bees stick to the elephants!
Now that the elephants are dead
The bees have shifted to flowers
Rained by angels glorifying victory
In this, the bees resemble prostitutes
Who desert their lovers who are no longer rich.

கொடியொடு கிடக்கும் யானைகள்

480. சாய்ந்துவிழும் கடகளிற்றின் உடனே சாய்ந்து
தடம்குருதி மிசைப்படியும் கொடிகள், தங்கள்
காந்தருடன் கனல்அமளி அதன்மேல் வைகும்
கற்புடைமா தரைஒத்தல் காண்மின்! காண்மின்!

Fallen elephants with flags

In the river of blood
Elephants fall along wit flags
This sight reminds one
Of a chaste wife, deciding
To end her life,
Lies besides her husband
In the bed of fire!

கணவரைத்தேடும் மகளிர்

481. தம்கணவ ருடன் தாமும் போக' என்றே
சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்!
'எம்கணவர் கிடந்த இடம் எங்கே?' என்(று) என்(று)
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின்! காண்மின்!

Wives in search of their husbands

Wishing to die along with their husband
Women asked Cātakar,
The bodyguards of **Kāḷi**
'Where their husband lay dead?
Exploring the entire – filed,
They went to the burning ghat
And asked Iṭākiṉi, corpse eating ghosts,
About the where abouts of their husbands!

ஆவி சோரும் மனைவி

482. வாய்மடித்துக் கிடந்தலை மகனை நோக்கி,
'மணி அதரத்(து) ஏதேனும் வடுஉண் டாயோ?
நீமடித்துக் கிடந்த(து)?'எனப் புலவி கூர்ந்து
நின்(று) ஆவி சோர்வாளைக் காண்மின்! காண்மின்!

A wife gives u her life

A wife asked a dead hero
In posture o biting his lips,
Whether he has got an injury on his lips
So saying, in utter desolation,
She gives up her life!

கணவனை தழுவி உயிர்விடும் பெண்

483. தரைமகள் கொழுநன்றன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன்உடலால் தாங்கி விண்ணாட்(டு)
அரமகளிர் அவ்உயிரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்!

A chaste women embraces and gives up her life

A chaste woman embraces her falling husband,
Preventing damsel Earth
From embracing him,
And puts an end to her life
Preventing angels of the heaven
From making love to him!

தலைபெற்ற மனைவி செயல்

484. பொருதடக்கை வாள் எங்கே? முனிமார்(பு)எங்கே
போர்முகத்தில் எவர்வரினும் புறம்கொ டாத
பருவயிரத் தோள் எங்கே? எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!

A wife bemoans

A sorrowing wife got only
The head of the hero!

She asks, yōkiṉi,
A female spirit,
'Where is the sword hand?
Where is his comely chest?
Where are his shapely arms
That never retreat from the battle-field?

கருமேகம் செம்மேகம் ஆனது

485. ஆடல்து ரங்கம்பி டித்(து) ஆளை ஆளோ(டு)
அடித்துப்பு டைத்(து) அவ்இ ரும்புண்ணின் நீர்
ஓடித்தெ றிக்கக் கருங்கொண்டல் செங்கொண்டல்
ஒக்கின்ற இவ்வாறு காண்மின்களோ!

Black clouds become red

In the battle filed
Soldiers dashed
Horse against horse
And man against man!
Blood splashed at the skies!
Thus black clouds became red ones!

கருங்காகம் வெண்காகம் ஒத்தல்

486. நெருங்(கு)ஆக வச்செங் களத்தே
தயங்கும்நி ணப்போர்வை மூடிக்கொள்க
கருங்காகம் வெண்காக மாய்நின்ற
வாமுன்பு காணாத காண்மின்களோ!

Black crows become white

In the battle filed
Red with blood,

Bodies 'lay in dense formations!
The carpet of serum
Encloses black corws
Which becomes white!
See this unprecedented sight!

தாமரைக் குளம்

487. மிடைஉற்ற தேர்மொட்டு மொட்(டு) ஒக்க,
வெம்சோரி நீர் ஒக்க, வீழ்தொங்கல்பா–
சடைஒக்க அடுசெங்க ளம்பங்க–
யப் பொய்கை ஆமாறு காண்மின்களோ!

Lotus pond

Chariot base resembles the bud!
Blood looks like water!
The hair of soldiers float
Like lotus leaves!
See the battle – field
Looks like a lotus pond!

வீரர் மூங்கிலை ஒத்தல்

488. வெயில்தாரை வேல்குழ வும் தைக்க
மண்மேல் விழாவீரர், வேழம்பர்தம்
கயிற்றால் இழுப்புண்டு சாயாது
நிற்கும் கழாய்ஒத்தல் காண்மின்களோ!

Heroes look like bamboos

Sharp spears penetrate all over the body;
Still the soldiers stand still!
Tied tightly by ropes on all sides,

By the rope-dancers
The bamboo stands secure!
So did soldiers stand!

பருந்தும் கழுகும்

489. இருப்புக்க வந்தத்தின் மீ(து) ஏற –
லும்சூரர் எஃகம்பு தைக்க இறகைப்
பரப்பிச்ச பூன்(று) இங்கொர் பா(று) ஆட,
ஈ(து)ஒர் பருந்(து) ஆடல் காண்மின்களோ!

Eagles and hawks

The truncated bodies lie
Strewn all over the filed
Hawks and eagles mount on the bodies,
The iron spears held by the soldiers
Pierce their bodies, the eagles are
Spreading their wings; hawks,
Circle round in pair!

உயிர் நீத்த பெருமிதம்

490. வரும்சேனை தம்சேனை மேல்வந்(து)உ –
றாமேவில் வாள்வீரர் வாணாள் உகக்
கரும்சேவ கம்செய்து செம்சோ(று)அ –
றச்செய்த கைம்மாறு காண்மின்களோ!

Pride in laying down their lives

To prevent the onslaught
Of the enemy's army
Swordsmen and bowmen confronted them
In the fore front of their formation

And laid down their lives
And amply repaid their benefactors
Who fed them!
Look at this heroic sacrifice!

வெற்றித் தெய்வ விளையாட்(டு)

491. யானைப்ப டைச்சூரர் நேர்ஆன
போழ்(து) அற்(று) எழுந்(து) ஆடு கின்றார்தலை
மானச்ச யப்பாவை விட்(டு) ஆடும்
அம்மானை வட்(டு) ஒத்தல் காண்மின்களோ!

Godness Victory plays Ammāṉai

When heroes of the elephant divisions
Confronted one another
Their heads rolled down!
Behold! This looks like
Goddess victory playing Ammāṉai

பங்கயப் பொய்கை

492. எதிர்கொளும் சுராவிமா னங்களில் சுரர்களாய்
ஏறுமா னவர்கள்தாம் எண்ணுதற்(கு) அருமையின்
கதிர்வீசும்(ப) அதனிலே இதனிலும் பெரியதோர்
காளையம் விளையுமா காண்மினோ! காண்மினோ!

Ascending heroes heaven

Welcomed by heavenly angels
Dying heroes alighted the planes
(bound for heaven)
